விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 27 ஞாயிற்றுக்கிழமை (12.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 267

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 500/= மட்டுமே



## சிறீதரன் சொல்வது உண்மையா? அல்லது சுமந்திரன் நாடகம் நடத்துகிறாரா?

(யாழ்ப்பாணம்)
விடுதலைப் புலிகளின் போர்க் குற்றங்களை விசாரியுங்கள் என தமிழரசுக் கட்சி ஐ.நாவிடம் கோரியதாக சொல்லப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் சிறீதரன் எம்.பி சொல்வது உண்மையா? அல்லது சுமந்திரன் எம்.பி நாடகம் நடத்துகின்றாரா? என ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பின் தலைவர் சுரேஸ் பிறேமச்சந்திரன் கேள்வி 15

வவுனியாவில்

## 96 பேருக்கு கொரோனா

(வவுனியா)
வவுனியாவில் 15

தற்போதைய முடக்கல் பயனளிக்காது

# ஆபத்தான வைரஸுடன் நிலைமை மோசமாகும்

பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை



*(கொழும்பு)*
பொதுமக்களை சரியாகக் கட்டுப்படுத்தாவிடின் மேலும் தொற்று அதிகரிப்பதுடன் அபாயகரமான கோவிட் வைரஸ் மாறுபாடுகளுடன் நிலைமை மோசமாகும் என பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.
*(15ஆம் பக்கம் பார்க்க)*

தென்மராட்சியில் திருமணத்துக்கு சென்ற வயோதிபப் பெண்

## விபத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் தென்மராட்சியின் மந்துவில் பகுதியில் திருமண நிகழ்வு ஒன்றுக்காக மோட்டார் 15

கொரோனா

## +2,796

(கொழும்பு)
கொரோனாத்தொற்று உறுதியான மேலும் 2,796 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
சுகாதார அமைச் 15

## சிவாஜிலிங்கத்துக்கு கொரோனா



(யாழ்ப்பாணம்)
தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் கோவிட் 15

## 11 ஆயிரத்தை தாண்டிய கொரோனா மரணங்கள்

மேலும் 157 பேர் மரணம்

(கொழும்பு)
நாட்டில் மேலும் 157 பேர் கோவிட் - 19 நோயினால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.
இதன்மூலம் நாட்டில் கோவிட்-19 நோயி 15

யாழ்.பல்கலை


## மருத்துவ பீட மாணவி மரணம்



*(யாழ்ப்பாணம்)*
யாழ்.பல்கலைக்கழக மருத்துவ 15

ஒரு கிலோ சீனி 200 ரூபாய்க்கு விற்பனை

## நல்லூர் ப.நோ.கூட்டுறவுச் சங்கத்துக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல்



(யாழ்ப்பாணம்)
நல்லூர்ப.நோ.கூ.சங்கத்தில் அதிக விலைக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை விற்பனை செய்த விடயத்தில் ப.நோ.கூ. சங்க கிளைக்கு எதிராக பாவனையாளர் அதிகார சபையினால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. 15

எழுதுமட்டுவாழ் பகுதியில்

## விபரீத முடிவெடுத்து மரணமான சிறுமிக்கு தொற்று

(சாவகச்சேரி)
தென்மராட்சி எழுதுமட்டுவாழ் பகுதியில் விபரீத முடிவெடுத்து உயிரிழந்த சிறுமிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
தென்மராட்சி எழுதுமட்டுவாழ் கரம்பகம் பகுதியைச் சேர்ந்த 12 வயதான சிறுமி ஒருவர் கடந்த 15

கோவிட் தொழில்நுட்ப குழுவிலிருந்து

## மேலும் சில மருத்துவ நிபுணர்கள் விலகல்?

(கொழும்பு)
கோவிட் தொழில்நுட்ப குழுவிலிருந்து மேலும் சில மருத்துவ நிபுணர்கள் விலக உள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.
மருத்துவ நிபுணர்களின் ஆலோசனை 15

## வவுனியாவில் 6 பேர் உட்பட வடக்கில் 10 பேர் கோவிட்டால் பலி

(யாழ்ப்பாணம்)
வவுனியாவில் 6 பேர் உட்பட வடக்கில் 10 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.
வவுனியாவில் கோவிட் தொற்றுக் காரணமாக நேற்று 6 மரணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
கோவிட் தொற்று காரணமாக சிகிச்சை பெற்று வந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் 15

# கணவன் உயிரிழந்ததையடுத்து மனைவி, மகள் மரணம்

## பரிசோதனையில் கொரோனா உறுதி

(புத்தளம்)

புத்தளத்தில் கணவன் உயிரிழந்ததைத் தொடர்ந்து அடுத்தடுத்து மனைவி மற்றும் மகள் உயிரிழந்த நிலையில், கணவனின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டுள்ளது.

வேப்பமடு பிரதேசத்திலுள்ள மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்ட நான்கு பிள்ளைகளின் தந்தையான முஹம்மட் நிஸ்தார் (வயது -56) என்பவரின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

புத்தளம் மாவட்ட மற்றும் நீதவான் நீதிமன்ற நீதவான் அசேல டி சில்வா முன்னிலையில் நேற்று காலை சடலம் தோண்டப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை தனது வீட்டில் காலமான குறித்த நபர், அன்றைய தினமே வேப்பமடு பிரதேசத்திலுள்ள முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்.


எனினும், குறித்த நபர் உயிரிழந்து இரு நாட்களின் பின்னர் 6ஆம் திகதி காலை அவரது மனைவி சித்தி அஜீபாவும் (வயது -51) மற்றும் அவரது மகள் பாத்திமா சஹ்னா (வயது -37) குறித்த தினத்தின் நண்பகல் வேளையிலும் அடுத்தடுத்து உயிரிழந்துள்ளனர்.

ஒரே நாளில் உயிரிழந்த தாய் மற்றும் மகள் ஆகிய இருவரினதும் ஜனாஸாக்கள் புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டு பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது இருவருக்கும் கோவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 4ஆம் திகதி உயிரிழந்த முஹம்மட் நிஸ்தாருக்கு (வயது - 56) கோவிட் தொற்று இருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக சுகாதாரப் பிரிவினர் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையிலேயே சடலம் தோண்டியெடுக்கப்பட்டுள்ளது. (ம-03)

# சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில்

## ஒரு கிலோ மஞ்சள் பருப்பு ரூ. 300 ஒரு கிலோ சீனி ரூ. 200



(யாழ்ப்பாணம்)

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு கிலோ சீனி200 ரூபாய்க்கும் ஒரு கிலோ மஞ்சள் பருப்பு 300 ரூபாய்க்கு விற்கப்படுவது தொடர்பில் பொது மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது தொடர்பில் பாவனையாளர் அதிகார சபை நடவடிக்கை எடுக்குமா? என கேள்வி எழுப்பியுள்ளனர்.

சங்கானை ஜே- 171 கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட பொதியில் மோசடி இடம்பெற்றுள்ளது.

சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் சிட்டையின் அடிப்படையில் 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் கொண்ட பொதி வழங்கப்பட்டுள்ளது.

அதனை அப்பகுதி கிராம சேவையாளர் தனிமைப்படுத்தப்பட்டிருந்த குடும்பம் ஒன்றுக்கு வழங்கி இருந்தார்.

அதனுள் இருந்த பொருட்களின் விலைகள் சாதாரண கடைகளின் விலைகளைவிட அதிக விலைகளில் காணப்படுகின்றன. சாதாரண கடைகளில் மஞ்சள் பருப்பு அதிகபட்ச விற்பனை விலையாக 240 ரூபாயாக உள்ளபோது, சிட்டையில் 300 ரூபாய் போடப்பட்டுள்ளது. அதேவேளை சீனியின் அதிகபட்ச விலை 125 ரூபாயாக உள்ளபோது சிட்டையில் 200 ரூபாய் போடப்பட்டுள்ளது. அவ்வாறாக பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு செய்யப்பட்டு மோசடி இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் எனப் பாதிக்கப்பட்டவர் கோரியுள்ளார்.

அதேவேளை யாழ்.மாவட்ட செயலரின் அறிவுறுத்தலுக்கு அமைய பாவனையாளர் அதிகார சபையினர் அதிக விலைகளுக்கு பொருட்களை விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். அந்நிலையிலேயே சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்க சிட்டையில் பொருட்களுக்கு அதிக விலைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-03,18)

# சர்வதேச சந்தையிலிருந்து ரூ. 50 ஆயிரம் கோடி கடன் பெற தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்கொள்ளும் கடுமையான நிதி நெருக்கடியை சமாளிக்க சர்வதேச சந்தையில் இருந்து 250 கோடி அமெரிக்க டொலர் (கிட்டத்தட்ட 50,000 கோடி ரூபாய்) கடனை அவசரமாகப் பெற எரிசக்தி அமைச்சு முடிவு செய்துள்ளது.

அமெரிக்காவை தளமாகக் கொண்ட கான்செப்ட் குளோபல் என்ற நிதி நிறுவனத்திடமிருந்து கடன் பெற அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. (ம-03)

# நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களுக்கு 3ஆம் கட்ட தடுப்பு அத்தியாவசியமானது

## விசேட வைத்திய நிபுணர் ரஜீவ டி சில்வா

(கொழும்பு)

புற்றுநோய், தீவிர எச்.ஐ.வி. நோய், நீரிழிவு உள்ளிட்ட பாரதூரமான நோய்களால் பாதிக்கப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களுக்கு எந்தவொரு தடுப்பூசியையும் முதற் கட்டமாக பெற்றுக் கொண்டதன் பின்னர், மூன்றாவது தடுப்பூசியையும் வழங்க வேண்டியது அத்தியாவசியமானதாகும் என்று நோய் எதிர்ப்பு தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ரஜீவ டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெளிவுபடுத்துகையில்,

சில நோயாளர்களுக்கு அவர்களது உடலில் காணப்படுகின்ற நாட்பட்ட நோய் நிலைமைகளால் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகாது. புற்றுநோய், தீவிர எச்.ஐ.வி. நோய், நீரிழிவு உள்ளிட்ட பாரதூரமான நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் இதில் உள்ளடங்குகின்றனர்.

எனவே இவ்வாறானவர்கள் எந்தவொரு தடுப்பூசியையேனும் இரு கட்டங்களாகவும் பெற்றுக் கொண்டதன் பின்னர் மூன்றாம் கட்ட தடுப்பூசியையும் பெற்றுக் கொள்வது அத்தியாவசியமானதாகும். அஸ்ட்ராசெனகா, மொடர்னா மற்றும் பைஸர் ஆகியவை மூன்றாம் கட்டமாக வழங்குவதற்கு பொருத்தமான தடுப்பூசிகள் ஆகும்.

எவ்வாறிருப்பினும் 6 மாதங்களின் பின்னர் இவர்களுக்கும் முதல் இரண்டு கட்டங்களாக பெற்றுக் கொண்ட அதே தடுப்பூசியை அல்லது பைஸர், மொடர்னா மற்றும் அஸ்ட்ராசெனகா ஆகியவற்றில் ஏதேனுமொன்றை மூன்றாம் கட்டமாக வழங்குமாறும் பரிந்துரைக்கின்றோம் என்றார். (ம-03)









# வவுனியாவில் 32 பேர் உட்பட வடக்கில் 69 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் 32 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 69 பேருக்கு பிசிஆர் பரிசோதனைகள் மூலம் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் வடக்கு மாகாணத்தினைச் சேர்ந்த 324 பேருக்கு நேற்று பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் உயிரிழந்த நால்வருக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இருவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள், இருவர் யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்தவர்கள்.

**வவுனியா மாவட்டத்தில் 32 பேர்**

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 25 பேர், வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் 07 பேர்.

**யாழ்.மாவட்டத்தில் 24 பேர்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் 09 பேர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 08 பேர், கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 03 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 02 பேர், நொதேர்ன் சென்றல் ஹொஸ்பிரலில் ஒருவர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர்.

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 06 பேர்**

வெலிஓயா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 04 பேர், மல்லாவி ஆதார வைத்தியசாலையில் 02 பேர்.

**கிளிநொச்சி மாவட்டத்தில் 07 பேர்**

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 04 பேர், இரணைமடு விமானப்படை முகாமில் 03 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-03)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# பயங்கரவாதத்தை ஒழிக்க ஒன்றிணையுங்கள்

## இலங்கை வலியுறுத்து

(கொழும்பு)

**பயங்கரவாதத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் மற்றும் வெளிப்பாடுகளிலும் ஒழிப்பதற்காக அனைத்து நாடுகளும் ஒன்றிணைவதற்கான தேவையை இலங்கை அரசாங்கம் மீண்டும் வலியுறுத்த விரும்புவதாக வெளி நாட்டலு வல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.**

அமெரிக்காவில் செப்டெம் பர் 11 பயங்கரவாத தாக்கு தல்கள் மேற்கொள்ளப்பட்டு நேற்றுடன் 20 ஆண்டுகள் நிறைடைந்துள்ளமையை முன்னிட்டு வெளிநாட்டலு வல்கள் அமைச்சு வெளியிட்டு ள்ள அறிக்கையிலேயே இவ் விடயம் தொடர்பில் தெரி விக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டு ள்ளதாவது,

அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த பல அப் பாவி மக்களின் உயிர் மற்றும் உடலுறுப்புக்களின் இழப்புக்கு வழிவகுத்த அமெரிக்காவின் மீது நடத்தப்பட்ட பயங்கர வாதத் தாக்குதல்கள் இடம் பெற்று நேற்றுடன் 20 ஆண் டுகள் நிறைவடைந்துள்ளன.

அமெரிக்காவின் சமகால வரலாற்றில் மிகவும் வேத னையான நிகழ்வை அவர்கள் நினைவுகூரும் இத்தரு ண த்தில், அமெரிக்க மக்கள் மற்றும் அரசாங்கத்துடனான தனது ஒற்றுமையை இலங்கை அர சாங்கம் வெளிப்படுத்துகின் றது.

கொடூரமான இந்தத் தாக்கு தல்களில் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவதற்கு இல ங்கை விரும்புகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

## வங்குரோத்து நிலையில் நாடு; சங்கீதக் கதிரை விளையாட்டில் அரசு

### சஜித் சாடல்

(கொழும்பு)

நாடு இப்போது வங்குரோ த்து நிலையை அடைந்து விட் டது. இந்நிலையிலிருந்து நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் திறன் தற்போதைய அரசாங்கத்திற்கு இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இன்று நாட்டில் ரேஷன் களின் சகாப்தம் மீண்டும் உருவாக்கப்பட்டு வருகிறது எனவும் அவர் குற்றம் சாட் டினார்.

திஸ்ஸமஹாராம, தெபர வெவவில் "ஜன சுவயா" திட் டத்தின் 26ஆவது கட்டத்தில் பங்கேற்ற போதே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்து ள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் பொறுப் பற்ற, திறமையற்ற மற்றும் செயற்திறனற்ற வேலைத் திட் டங்கள் நாளாந்தம் நிரூபிக் கப்பட்டு வருகின்றன.

இவற்றுக்குப் பதிலாக தலை வலிக்கு தலையணை மாற்று வது மட்டுமே அவ்வப்போது நடந்து வருகின்றது.

இந் நாட்டின் பொருளா தாரக் கொள்கையில் முழுமை யான மாற்றம் தேவை என்றா லும் தற்போதைய அரசாங்கம் கண் மாயைகளைச் செயற் படுத்திக் கொண்டுருப்பதா கவும், அமைச்சர்களை மாற்று வதற்காக அரசாங்கம் ஒரு இசை நாற்காலி போட்டியை தொடங்கியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்து ள்ளார். (நி-4)

## கட்சி தாவும் எம்.பிக்கள்? கொழும்பு அரசியலில் பரபரப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள்சக்தியின் பாரா ளுமன்ற உறுப்பினர்கள் சிலர் விரைவில் மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொள்ளவிருப்பதாக தென் னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த செய்திக் குறிப்பில், அண்மைய நாட்களாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸவின் செயற்பாடுகள் குறித்து இவர்கள் அதிருப்தி கண்டுள்ளனர்.

இதனால், ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 10 பேர் கட்சி தாவ தயாராகவுள்ளனர்.

சஜித் பிரேமதாஸ, அரசாங் கத்தில் இருக்கின்ற ஒரு உறுப் பினர் மற்றும் அமைச்சர்கள் இருவரது ஆலோசனைக்க மைய செயற்படுவதாக கட்சி தாவ இருக்கும் உறுப்பினர்கள் குற்றம் சுமத் தியுள்ளனர்.

இவ்வாறு கட்சி தாவலுக்குத் தயாராக உள்ளவர்கள் பற்றிய தகவல் அடுத்துவரும் நாட்க ளில் வெளிவரும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

## சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்க அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது

### ரஞ்சித் விதானகே தெரிவிப்பு

(கொழும்பு)

லாப் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை மீண் டும் அதிகரிக்க அரசா ங்கம் அனுமதிவழங்க கூடாது. நிறு வனங்களின் கோரிக்கைக்கு மாத்திரம் கவனம் செலுத் தாமல் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தரப்பில் இருந்து அரசாங்கம் தீர்மானங்களை எடுக்க வேண்டும் என நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித் தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

லிட்ரோ சமையல் எரிவா யுவின் விலை அதிகரிக் கப்படாத காரணத்தினால் தமது நிறுவனத்திற்கு 8 பில் லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் 12.5 கிலோகிராம் சமையல் எரி வாயு சிலிண்டரின் விலையை 291 ரூபாயிலும், 5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை 114 ரூபாயிலும் அதிகரிக்க அனு மதி வழங்குமாறு லாப் நிறுவ னம் நுகர்வோர் அதிகார சபை யிடம் கோரிக்கை விடுத்து ள்ளது.

இக்கோரிக்கைக்கு அனு மதி வழங்கப்பட்டால் 12.5 கிலோகிராம் நிறைவுடைய லாப் ரக சமையல் எரிவாயு வின் புதிய விலை 2147 ரூபாயாகவும், 5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரி வாயுவின் புதிய விலை 858 ரூபாயாகவும் உயர்வடையும்.

கடந்த மாதம் 12.5 நிறை யுடைய லாப் ரக சமையல் எரிவாயுவின் விலை 363 ரூபாயிலும், 5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயுவின் விலை 145 ரூபாயினாலும் அதிகரிக்கப்பட்டன. சமையல் எரிவாயு சிலிண்டர் இறக்கு மதிக்கு அதிக செலவாகுகிறது. அதனால் தாம் நட்டமடைவ தாக லாப் சமையல் எரிவாயு நிறுவனத்தினர் குறிப்பி டுகிறார்கள்.

லாப்ரக சமையல் எரிவாயு வின் தற்போதைய விலை அதிகரிப்பினால் மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்க் கொண் டுள்ளார்கள்.

ஆகவே மக்களின் தரப்பில் இருந்தும் அரசாங்கம் தீர்மா னம் எடுக்க வேண்டும் என்றார். (நி-4)

## செம்மணியில் சுற்றிவளைப்பு கசிப்புடன் நால்வர் கைது



(யாழ்ப்பாணம்)

ஊரடங்கு அமுலில் உள்ள நிலையிலும் யாழில் சட்டவி ரோத கசிப்பு விற்பனை அதிக ரித்துள்ளது.

இது தொடர்பாக யாழ்ப் பாணம் பொலிஸாருக்கு கிடை க்கப்பெற்ற இரகசிய தகவ லையடுத்து யாழ். பகுதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கை இடம்பெற்றது.

இந்நிலையில் நேற்று அதி காலை ஒரு மணியளவில் யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் வைத்து 180 லீற்றர் கோடா மற்றும் 20 லீற்றர் கசிப்புடன் நால்வர் யாழ்ப் பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டுள்ள நால்வரும் எதிர்வரும் 27ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளனர். (4-7-104)

## புத்தளத்தில் இறந்த நிலையில் கரையொதுங்கிய கடலாமை



(கொழும்பு)

புத்தளம் உடப்பு முகத்துவாரம் பகு தியில் நேற்று அதிகாலை கடலாமை ஒன்று உயிரிழந்த நிலையில் கரை யொதுங்கியுள்ளது.

சில மாதங்களுக்கு முன்பாக கொழு ம்பு துறைமுக கடற்பரப்பிற்கு வெளியே எம்.வி. எக்ஸ்பிரஸ் கப்பல் தீப்பிடித்து எரிந்ததையடுத்து பல கடலாமைகள், டொல்பின்கள், திமிங்கலங்கள் என கடல்வாழ் உயிரினங்கள் தொடர்ந்து உயிரிழந்து கரையொதுங்கிவந்த நிலை யில் இவ்வாறு கடலாமையொன்று கரை யொதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி-4)


## கண்ணீர் அஞ்சலி

அமரர். செல்லத்துரை சுப்பிரமணியம்

(இளைப்பாறிய நில அளவை அத்தியட்சகர், உத்தரவு பெற்ற நில அளவையாளர்)



எமது சங்கத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய உப தலை- வருமாகிய அமரர் செல்லத்துரை சுப்பிரமணியம் அவர்களின் மறைவை ஒட்டி எமது சங்கத்தின் சார்பில் அன்னாரின் குடும்பத் தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதுடன் சங்கம் சார்பாக எமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம் (வடபகுதி)

(7887)

# இறுதி டெஸ்ட் குறித்து 22 ஆம் திகதி முடிவு

## கங்குலி தெரிவிப்பு



இந்தியா- இங்கிலாந்து அணிகள் இடையேயான 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ரத்து செய்யப்பட்டது.

இதனால் இந்த டெஸ்ட் போட்டி ரத்து செய்யப்பட்டதா, ஒத்தி வைக்கப்பட்டுள்ளதா அல்லது இந்தியா இந்த டெஸ்டை இழந்ததா என்ற சர்ச்சை எழுந்தது. இதற்கு இந்திய கிரிக்கெட் வாரியம் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

அதன்படி இந்த டெஸ்ட் தொடர் இன்னும் முடியவில்லை.

இந்தியா 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது என்றும், கடைசி டெஸ்ட் மற்றொரு நாளில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஒத்தி வைக்கப்பட்ட 5-வது டெஸ்ட் போட்டியை எப்போது நடத்துவது என்பது குறித்து வருகிற 22 அல்லது 23-ந் தேதி முடிவு செய்யப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டு வாரிய தலைவர் கங் குலி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் வாரிய தலைமை நிர்வாகியுடன் இது தொடர்பாக ஆலோசித்து முடிவு செய்யப்படும் என்று அவர் அறிவித்துள்ளார். கடைசி டெஸ்ட் ரத்தானதால் இங்கிலாந்து கிரிக் கெட் வாரியத்துக்கு மிகப்பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. (4-6)



## இங்கிலாந்திலிருந்து டுபாய் வரும் வீரர்களை தனிமைப்படுத்த உத்தரவு

இந்த ஆண்டின் ஐபிஎல் போட்டிகள், கொரோனா பரவல் காரணமாக, கடந்த மே மாதம் 4-ம் திகதியோடு நிறுத்தப்பட்டன. முதல் சுற்று லீக் ஆட்டங்கள் மட்டுமே நடந்து முடிந்திருந்தன. 2-வது சுற்று லீக் ஆட்டங்கள், சூப்பர் லீக் மற்றும் இறுதி ஆட்டம் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் 2-வது கட்ட ஐபிஎல் இருபது-20 லீக் ஆட்டங்கள் செப்டெம்பர் 19 ஆம் திகதி தொடங்குகிறது. முதல் ஆட்டத்தில் சிஎஸ்கே அணியும், மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதுகின்றன. 27 நாட்கள் நடக்கும் போட்டித்தொடரில் மொத்தம் 31 ஆட்டங்கள் நடக்கின்றன.

தற்போது இந்திய அணி இங்கிலாந்தில் டெஸ்ட் தொடரை முடித்துள்ளதால் அங்கிருந்து ஐபிஎல் போட்டியில் பங்கேற்பதற்காக ஐக்கிய அரபு அமீரகம் செல்ல உள்ளனர். அவர்கள் அனைவரும் ஐக்கிய அரபு அமீரகத்தை அடைந்ததும், 6 நாட்கள் தனிமைப் படுத்தப்பட்டு, அதன் பின்னர் பயோ பபுள் பாதுகாப்பு வளையத்தில் உள்ள வீரர்களுடன் இணைய வேண்டும் என பிசிசிஐ தெரிவித்துள்ளது. (4-6)





பிரித்தானியாவில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினால் தியாக தீபம் லெப். கேணல் திலீபன் நினைவாக நடத்தபடும் கோடைகால விளையாட்டு போட்டிகள் கடந்த 5 ஆம் திகதி Roundshaw மைதானம் குரோய்டேன் எனும் இடத்தில் இடம்பெற்றது. இதில் துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், கரப்பந்து, வலைப்பந்து, சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள் மற்றும் பாரம்பரிய விளையாட்டுகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.

# இறுதிப் போட்டியில் மெட்வேடவ் - ஜோகோவிச்

விறுவிறுப்புக்கு பஞ் மில்லாமல் நடைபெற்று வந்த அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர், இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

இதன்படி தற்போது ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன.

முதலாவது ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டியில், உலகின் முதல்நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரவ்வும் பலப்பரீட்சை நடத்தினர்.



இப்போட்டியில், நோவக் ஜோகோவிச், 4-6, 6-2, 6-4, 4-6, 6-2 என்ற செட் கணக்குகளில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இரண்டாவது ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதிப்போட்டியில், கனடாவின் பெலிக்ஸ் ஆகர் அலியாசிமும் ரஷ்யாவின் டேனில் மெட்வேடவ்வும் மோதினர்.

இப்போட்டியில், 6-4, 7-5, 6-2 என்ற நேர் செட் கணக்குகளில், ரஷ்யாவின் டேனில் மெட்வேடவ் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார். (4-6)

# சந்திமாலின் அரை சதம் வீண்

## தென்னாபிரிக்காவிடம் வீழ்ந்தது இலங்கை



இலங்கை அணிக்கெதிரான முதலாவது இருபது-20 போட்டியில், தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி28 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில், 1-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா அணி முன்னிலை பெற்றுள்ளது.

கொழும்பு- ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 163 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக ஹெய்டன் மார்க்கம் 48 ஓட்டங்களையும் ரீஸா ஹென்ரிக்ஸ் 38 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுகளையும் சமீர, தீக்ஷன மற்றும் தசுன் சானக ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 164 என்ற வெற்றிஇலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணியால், நிர்ண யிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 135 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் தென்னாபிரிக்கா அணி 28 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, தினேஷ் சந்திமால் ஆட்டமிழக்காது 66 ஓட்டங்களையும் சாமிக கருணாரத்ன ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், போர்ச்சுன், நோட்ஜே, மஹாராஜ், சம்ஸி மற்றும் பிரிடோரியஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 33 பந்துகளில் 2 சிக்ஸர்கள் 1 பவுண்ரி அடங்களாக 48 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட ஹெய்டன் மார்க்கம் தெரிவு செய்யப்பட்டார். (4-6)

# இராசிபலன்

12.09.2021
ஆவணி 27, ஞாயிற்றுக்கிழமை
சஷ்டி முன்னிரவு 8.01 மணிவரை
விசாகம் பிற்பகல் 1.10 மணிவரை
சுபநேரம் -9.03-10.33 மணிவரை
இராகுகாலம் -4.33- 6.03 மணிவரை
சந்திராஷ்டமம்- அச்சுவினி, பரணி
சஷ்டி விரதம் வளவன்


**மேஷம்** — ஆரோக்கியத்தில் கவனம் தேவை, மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.


**ரிஷபம்** — சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.


**மிதுனம்** — வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும்.


**கடகம்** — அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, உடல்நலம் சீராகும்.


**சிம்மம்** — சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்,வாகன சுகமுண்டு, உறவினர் வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுபசெய்திகள் வந்து சேரலாம்.


**கன்னி** — கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி காண்பீர்கள், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பம் ஏற்படலாம்.


**துலாம்** — உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


**விருச்சிகம்** — விரும்பிய காரியங்கள் விரும்பியபடியே நடைபெறும் வாய்ப்புண்டு, வழிபாடு குதூகலம் தரும், வருமானம் திருப்தி தரும், கற்பனை மிகுதியான நாள்.


**தனுசு** — பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், தொழிலில் எதிர் பாராத திருப்பங்கள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.


**மகரம்** — பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.


**கும்பம்** — பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


**மீனம்** — அன்பால் சாதித்துக் காட்டும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர், போசனசுக முண்டு.

தன்னம்பிக்கையும், துணிச்சலும் சிகர வாழ்வின் இரு சக்கரங்கள்

# அஜித் நிவாட் கப்ராலின் வெற்றிடத்துக்கு ஜயந்த கெட்டகொடவின் பெயர் பரிந்துரை

(கொழும்பு)
மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யு.டி. லக்ஷ்மன் இன்னும் இரண்டு தினங்களில் தமது பதவியிலிருந்து விலக உள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் மீள நியமிக்கப்பட்டதை அடுத்து, அந்தப் பதவிக்கான அதிகாரங்களை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அஜித் நிவாட் கப்ரால் தமது பாராளுமன்ற உறுப்புரிமையில் இருந்து விலகுவதால் வெற்றிடமாகும் தேசியப் பட்டியலின் பாராளுமன்ற உறுப்புரிமைக்கு, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொடவை நியமிப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன அவதானம் செலுத்தியுள்ளது.

பசில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்க வாய்ப்பளித்து, ஜெயந்த



கெட்டகொட தமது பாராளுமன்ற உறுப்புரிமையில் இருந்து விலகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# பைஸருக்காக அலையும் மக்கள்

(கொழும்பு)
கொழும்பு மாவட்டத்தில் பைஸர் தடுப்பூசி இல்லாத பட்சத்தில் ஏனைய தடுப்பூசியை பெறமனதில்லாமல் 20 தொடக்கம் 30 வயது வரையான வர்கள் பலரும் திரும்புவது அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது என கொழும்பு மாநகர சபை பிரதான மருத்துவர் ருவன் விஜய முனி இதனை தெரிவித்துள்ளார்.

தாம் எதிர்பார்த்த எண்ணிக்கையை விட இவ்வாறு தடுப்புசிபெறாமல் திரும்புவோர் 30 வீதமாக உள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

## பலத்த காற்றினால் அம்பாறையில் 23 வீடுகள் சேதம்



(அம்பாறை)
அம்பாறை - தமன பகுதியை ஊடறுத்து வீசிய கடும் காற்றினால் 23 வீடுகளுக்கு சேதமேற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை வீசிய பலத்த காற்றினால் தேவாலஹிந்த பகுதியில் 21 வீடுகளுக்கும் திம்பிரி கொல்ல பகுதியில் 02 வீடுகளுக்கும் சேதமேற்பட்டுள்ளதாக தமன பிரதேச செயலாளர் உதார நாணாயக்கார தெரிவித்துள்ளார். (நி-4)

## நேரடி விமான சேவையை ஆரம்பிக்கும் ஏர் பிரான்ஸ்

(கொழும்பு)
இலங்கைக்கான நேரடி விமான சேவையைத் எதிர்வரும் நவம்பர் 1 ஆம் திகதி முதல் ஏர் பிரான்ஸ் ஆரம்பிக்கவுள்ளது என விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த விமான நிறுவனம் ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, மத்திய அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா போன்ற பிராந்தியங்களில் இருந்து சுற்றுலாப்பயணிகளை அழைத்து வர திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏர் பிரான்ஸ் செயற்பாடுகள் நாட்டில் சுற்றுலாத் துறையில் ஒரு ஏற்றத்தை உருவாக்கும் என்று விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தெரிவித்துள்ளன. (நி-5)

## 153 கிலோ ஹெரோயினுடன் 9 வெளிநாட்டவர்கள் கைது

(கல்முனை)
மட்டக்களப்பு தென் கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது படகொன்றின் ஊடாக கடத்தப்பட்ட 153 கிலோகிராம் ஹெரோயினுடன் 9 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பொலிஸார் மற்றும் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-4)

# தடையின்றி மின்சாரத்தை பெற தாமதமின்றி கட்டணத்தை செலுத்துங்கள்

## இலங்கை மின்சாரசபை அறிவிப்பு


(கொழும்பு)
நுகர்வோர் தடையின்றி மின்சாரம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் விரைவில் மின் கட்டணத்தைச் செலுத்துங்கள் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

தடையின்றி மின்சாரம் பெற்றுக்கொள்ளச் சரியான முறையில் மின் கட்டணத்தை தாமதமின்றி செலுத்துமாறு அந்தச் சபை கேட்டுக் கொண்டுள்ளது.

இலங்கை மின்சார சபை இணையத்தளம் அல்லது கையடக்கத் தொலைபேசியைப் பயன் படுத்தி வீட்டில் இருந்த வாறே கட்டணங்களை செலுத்த முடியும் என்றும் தெரிவித்துள்ளது.

இன்று வரை இலங்கை மின்சார சபை மக்களின் தேவைகளுக்காக அத்தியாவசிய செலவுகளைச் செய்வதற்கும் எரிபொருளைப் பெறுவதற்கும் வரும் செலவுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது என்றும் நுகர்வோர் மின்சார கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் கிடைக்கும் வருமானம் பாரிய உதவியாக இருக்கும் என்றும் அந்தச் சபை தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று சூழ் நிலையில் நாளாந்த மின்சார நுகர்வு அதிகரித்துள்ளது எனவும் கடினமான சூழ் நிலையிலும் மின்சார சபை தனது தேசிய கடமையைத் தொடர்ந்து செய்து வருகிறது எனவும் அச் சபை தெரிவித்துள்ளது. (நி-4)



யாழ்.மாநகர சபையின் மறைந்த முன்னாள் முதல்வர் சட்டத்தரணி பொன்.சிவபாலனின் 23 ஆவது நினைவுதினம் நேற்று யாழ். சித்தன்கேணியில் அனுஷ்டிக்கப்பட்டது.

(படம்- சிவசாந்தன், கஜிந்தன்)

# விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் வழங்கப்படும் பேராசிரியர் அ. துரைராஜா ஞாபகார்த்த தங்கப் பதக்கம் மற்றும் பேராசிரியர் க. குணரட்ணம் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் ஆகிய தங்கப் பதக்கங்களுக்குத் தகுதி பெற்ற - அவற்றுக்காகத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருக்கும் மாணவர்களைத் தமது விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக கல்வி விவகாரங்கள் மற்றும் ஆய்வு, வெளியீட்டுக் கிளையின் உதவிப் பதிவாளர் கோரியுள்ளார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறை காரணமாக தபால் மூலத் தொடர்பாடல்களில் மந்த நிலை ஏற்பட்டிருப்பதனால் தபால் மூலமாகத் தமது விண்ணப்பங்களை அனுப்பிய மாணவர்கள் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரையான அலுவலக நேரத்தினுள் நேரடியாக அல்லது 021 222 6500 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமையை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும், விண்ணப்பத்தின் பிரதியை அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களை araca@univ.jfn.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கோரியுள்ளார்.

(4-7-33)

# போட்டி முடிவு திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் உற்சவகாலத் தினை முன்னிட்டு நடத்தும் 'நூலறிவுப் போட்டி - 2021' இற்கான முடிவுத் திகதி 02.09.2021 என அறிவுறுத்தப்பட்டிருந்த நிலையில், அப் போட்டிக்கான கால எல்லை நாட்டில் நிலவுகின்ற அசாதாரண சூழ் நிலையைக் கருத்திற் கொண்டு மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தற்போது நடைமுறையிலிருக்கும் ஊரடங்கு நீக்கப்படும் நாள் தொடங்கி மூன்று தினங்களுக்குள் விடைத்தாள்களை உரிய அறிவுறுத்தல்களைப் பின்பற்றிப் பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கலாம் அல்லது பிராந்திய அலுவலகங்களில் நேரடியாக ஒப்படைக்கலாம் என ஏற்பாட்டு குழு அறிவித்துள்ளது. (4-7)



பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட குடும்பம் ஒன்றிற்கு இராணுவத்தினரினால் வீடு அமைத்துக் கொடுப்பதற்காக அடிக்கல் நாட்டு விழா நேற்று சனிக்கிழமை முற்பகல் இமையாணன், இலக்கணாவத்தையில் இடம்பெற்றது.

(படம்- மகாலிங்கம்)




கவியா




ஜீவி





ருஷிகா




மதிவாணன்




ஜதீசன்




பிரதீபன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அநாவசியமாக பயணிப்போருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பொதுச்சுகாதார அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

**(கொழும்பு)**

**நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டுள்ள நிலையில் வீதிகளில் அநாவசியமாக பயணம் செய்பவர்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.**

எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணி வரை நாடளாவிய ரீதியில் நடைமுறையில் உள்ள ஊரடங்கு நீடிப்பு குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அதன் தலைவர் உபுல் ரோஹண இதனைத் தெரிவித்தார்.

பொதுமக்கள் அவசியமற்ற முறையில் பயணிப்பதற்கு அதிகாரிகள் அனுமதியளிப்பார்களாயின், இந்த ஊரடங்கு சட்டத்தில் எவ்வித பயனும் ஏற்படாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

## மத்திய வங்கி சுயாதீனமாக செயற்பட வேண்டும்

### எதிர்க்கட்சி சாடல்

(கொழும்பு)

மத்திய வங்கியானது அரசிடமிருந்து பிரிந்து சுயாதீனமாக செயற்படவேண்டும் என்பதே அதன் கொள்கைகளில் முதன்மையானதாகும்.

ஆனால் இப்போது மத்திய வங்கி அரச திணைக்களமொன்றைப்போல மாறியிருக்கின்றது என்று பலரும் விமர்சிக்கின்றார்கள்.

அவ்வாறிருக்கையில் அரசியல்வாதியொருவரை, அதிலும் அமைச்சுப்பதவி வகித்த ஒருவரை உடனடியாகவே மத்திய வங்கியின் ஆளுநராக நியமிப்பதென்பது அக்கட்டமைப்பின் சுயாதீனத்தன்மையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பொறுப்பி லிருந்து பேராசிரியர் டபிள்யூ. டி.லக்ஷ்மன் விலகவுள்ள நிலையில், அப்பதவிக்கு தற்போதைய இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்படவுள்ளார்.

இதுகுறித்து தனது அபிப்பிராயத்தை வெளியிடுகையிலேயே எரான் விக்ரமரத்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (நி-4)


## சேவைநலன் பாராட்டு

செல்வி. இரத்தினசபாபதி வசந்தி

(SLTS-1)



எமது பாடசாலையில் பகுதி நேர மனைப்பொருளியல் ஆசிரியையாகச் சேவையாற்றி 12.09.2021 இன்று தனது அறுபதாவது அகவையில் ஓய்வு பெற்றுச் செல்லும் செல்வி. இரத்தினசபாபதி வசந்தி அவர்களை அவரது ஓய்வுக்காலம் சிறக்க மனமுவந்து வாழ்த்துகிறோம். (C-2641)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்




சிவமயம்-ஓம் நமசிவாய- ஓம் சரவணபவ

## நல்லூர் அலங்காரக்கந்தன் 2021 ஆம் ஆண்டு மஹோற்சவத்தை தொலைக்காட்சியில் உலகம் பூராகவும் பார்த்து இன்று ஞாயிறு சஷ்டி விசாகம் கூடிய இறை நாளில் வீட்டில் இருந்து திருப்புகழ், கந்தன் அனுபூதி தினம் ஓதி வழிபடுவோம்

**தேரணியிட்டுப் புரம் எரித்தான் மகன் செல்கையில் வேல்**
**கூரணியிட்டனு வாகிக் கிரௌஞ்சல் குலைந்தரக்காட**
**நேரணி யிட்டு வளைந்த கடகம் நெளிந்தது ஆர்ப்பது**
**பேரணி கெட்டது தேவேந்தர லோகம் பிழைத்ததுவே**

**-கந்தர் அலங்காரம்-3**

கந்தக் கடவுளின் கரத்திலிருக்கும் வேலாயுதம் பாய்ந்து, கிரௌஞ்ச மலையும் சூரனது படைகளும் அழிந்தன. தேவலோகம் பாதுகாக்கப்பட்டது. அதுபோல் நாம் வாழும் பூலோகம் காக்க இம்முறை நல்லூர்க் கந்தனது வேல் திருத்தேரில் வந்து அருள்புரிந்தார்.

**மயில் போற்றி வேல் போற்றி மறியாடு போற்றி**
**வன் காற்படைச் சேவலும் போற்றி நந்தூர்**
**உயர் வெண்டிரை சிந்துவும் போற்றி முருகோன்**
**உபயப் பதம் போற்றி நல்லூர் உறைவேல் போற்றி**

தீமையையே கருதுகின்ற புத்தியே! சமுத்திரத்தின் கண் அசுரர் கிளையுற மாய்த்த வேலையுடையவனே! வேதியர்கள் தொழுத்தக்க சரவண முத்தானவனே! மறையோர் செய்யும் யாகத்தின் அவிர்பாகத்திற்கு உரியவனே! நல்லூர்க்கந்தனே எனப் போற்றித் துதித்த தீமையயும் கொரோனாவும் சனன மரணமும் நீங்கும், அறும்.

**கையொன்று செய்ய விழி ஒன்று நாடக்**
**கருத்தொன்று எண்ணப்**
**பொய் ஒன்று வஞ்சக நா ஒன்று பேசப்**
**புலால் கமமும்**
**மெய் ஒன்று சாரச் செவி ஒன்று கேட்க**
**விரும்பும் யான்**
**செய்கின்ற பூசை எவ்வாறு கொள்வாய் வினை**
**தீர்த்தவனே**

**-பட்டினத்து அடிகள்**

ஐந்து பொறிகளும் சேர்ந்து ஒன்றுபட்டு இறைவனுக்குப் பூசை செய்ய வேண்டும். ஆலயத்தில் வழிபட வேண்டும். கோயில், அங்கே உள்ள மூர்த்தி,அதற்குச் செய்யும் அலங்காரம், அங்கே பாடும் திருப்புகழ் இவை அத்தனையும் நம்பொறிகளாகிய மதம் பிடித்த யானைகளுக்கு உணவாகி, அவற்றின் மதத்தை மாற்றி நல்ல நெறியிலே அழைத்துச் சென்று கடைசியில் அவற்றைப் படுக்க வைக்கின்றன.

இது பக்தி நெறியாகிய எளியவழி. நல்லூர் அலங்காரக் கந்தனைப்பார்த்து நாமும் வீட்டில் அலங்காரம் பண்ணிக் கண் குளிரப் பார், அவன் புகழ் பாடு. ஐம்பொறிகளாகிய மதம்பிடித்த யானைகள் தத்தம் விருப்பப்படியே உலகத்திலுள்ள பொருட்களை அனுபவிக்கும் போது அவற்றை இறைவனுடன் சம்பந்தப்படுத்தி இறைவனை, அலங்காரத்தை, கந்தர் அலங்காரம், திருப்புகழ், கந்தர் அனுபூதி, கந்தர் அந்தாதி ஓதி, பொறிகளை வசப்படுத்தி, இறைவனுடன் மனம் ஒன்றி பெருமாள் நாமம், கந்தா, முருகா, குமரா, குகா என இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதவன் தாள் வாழ்க என ஓதி ஆலயங்களிலும் இல்லங்களிலும் உள்ளங்களிலும் ஒலிக்குமாறு செய்வது சிறந்ததொரு சிவப்பணியாகும்.

கல்வியின் பயன் சிவஞானத் தெளிவுபெறல், செல்வத்தின் பயன், சிவாலயத் திருப்பணிகளில் ஈடுபடல், வாழ்வின் பயன் தான் பெற்ற இறை- அனுபவ இன்பத்தை இவ் வையகத்தோர் யாவரும் பெறுமாறு செய்தல். என்றும் சீலமிகு குறிக்கோளுடைய குமாரதாஸ் மாப்பாண முதலியாருடன் மகனையும் நல்லூர் முருகவேலின் பெருமையை உலகறியச் செய்ய கந்தன் திருவருளைச் சிந்திக்கிறோம்.

**ஈசனை ஏத்தி ஓதுவோம் நெஞ்சத்துள்**
**தியானம் செய்வோம் ஆசார சீலமும்**
**ஒழுக்க நெறியும் உடைய திருத்தொண்டராகி**
**ஆலயம் சென்று ஐந்து பொறிகளும் சேர்த்து**
**ஒன்றுபட்டு வழிபடுவோம்.**



ஓம் நமசிவாய
முருகன் அடியார்
க.கு.க. சிவபாலன். (K.K.K.)

(C-2643)

# முன்னாள் துணை ஜனாதிபதியின் சகோதரரை தூக்கிலிட்ட தலிபான்கள்

(காபூல்)

**தலிபான் எதிர்ப்பு பஞ்ஷீர் படைகளின் தலைவர்களில் ஒருவரான முன்னாள் ஆப்கானிஸ்தான் துணை ஜனாதிபதி அம்ருல்லா சலேவின் சகோதரர் ரோஹுல்லா சலேவை தலிபான்கள் தூக்கிலிட்டு கொலை செய்ததாக அவரது மருமகன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.**



பஞ்ஷீர் பள்ளத்தாக்கை தலிபான்கள் கைப்பற்றிய சில நாட்களின் பின்னர் அவர் தூக்கிலிடப்பட்டார். "அவர்கள் என் மாமாவை தூக்கிலிட்டுக் கொன்றுவிட்டனர்" என எபதுல்லா சலே றொய்ட்டர்ஸ் சர்வதேச செய்தி முகாமையிடம் தெரிவித்துள்ளார்.

அவரை அடக்கம் செய்ய விடமாட்டோம். அவரது உடல் அழுக வேண்டும் என்று தலிபான்கள் கூறியதாகவும் அவர் குறிப்பிட்டார். பஞ்ஷீரின் மாகாண தலைநகரான பஜாராக் வீழ்ச்சியடைந்த பிறகும் தலிபான்களை எதிர்த்துத் தாம் போரிட்டு வருவதாக ஆப்கானிஸ்தான் துணை ஜனாதிபதி அம்ருல்லா சலே தலைமையிலான பஞ்ஷீர் கிளர்ச்சிக் குழுவினர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(7-4)

# இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகும் ஆறாத வடுக்கள் செப்.11 தாக்குதலில் உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி



(வோஷிங்டன்)

உலகையே உலுக்கிய செப்டம்பர் 11 தாக்குதலின் 20ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் வெளியிட்ட காணொளியில், உயிரிழந்த 2,977 பேருக்கு அஞ்சலி செலுத்தினார்.

அத்துடன் தாக்குதல்களுக்குப் பதிலளித்த அவசரப் பணியாளர்களைப் பற்றிப் பேசிய பிடன், 'நிமிடங்கள், மணிநேரங்கள், மாதங்கள் மற்றும் ஆண்டுகளுக்குப் பிறகு தங்கள் உயிரைக் கொடுத்த அனைவரையும் நாங்கள் மதிக்கிறோம்' எனக் கூறினார். அதேவேளை, 'ஒற்றுமை என்பது ஒருபோதும் உடைக்கப்பட முடியாத ஒன்று என்பதை நாங்கள் கற்றுக்கொண்டோம்,' என்று அவர் மேலும் தெரிவித்தார். (7-4)

# கொரோனாவுக்கு மருந்தாக எறும்பு சட்னியை பரிந்துரைக்க கோரி மனு

## நிராகரித்த உயர்நீதிமன்றம்

(டில்லி)

இந்தியாவின் ஒடிசா, சத்தீஸ்கர் உள்ளிட்ட மாநிலங்களில் வசிக்கக்கூடிய பழங்குடியினர் சிவப்பு எறும்பு சட்னியை உணவாக விரும்பி உண்டு வருகின்றனர்.

சிவப்பு எறும்புகளுடன் பச்சை மிளகாய் சேர்த்து அரைத்து அதைத் தேங்காய் சட்னி போல பயன்படுத்துகின்றனர். இந்நிலையில், ஒடிசாவை சேர்ந்த பொறியியலாளர் ஒருவர் இது தொடர்பாக அம்மாநிலத்தின் மேல் நீதிமன்றில் பொதுநல வழக்கு ஒன்று தொடர்ந்தார்.

அதில் சிவப்பு எறும்பு சட்னியில் இரும்புச்சத்து, கல்சியம், துத்தநாகம் ஆகியவை அதிகமாக இருப்பதாகவும், இதனால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும், கொரோனாவுக்கு மருந்தாக இதனை பரிந்துரைக்க வேண்டும் எனவும் அவர் தனது கோரிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதனை விசாரித்த உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம், கொரோனாவை ஒழிப்பதற்கான மருந்துகள் நிறைய உள்ளன.

இவற்றை கொரோனாவிற்கு மருந்தாக பயன்படுத்த முடியாது. இந்த எறும்பு சட்னியை நீங்கள் உங்கள் சொந்த பயன்பாட்டுக்காக வைத்திருக்கலாம். ஆனால் நாடு முழுவதும் உள்ள அனைவருக்கும் அதனை கொடுக்க உத்தரவிட முடியாது எனவும் மேலும் ஒடிசா பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த இந்த மனுதாரர் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும் எனக்கூறி, உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் அந்த மனுவை தள்ளுபடி செய்தது. (7-4)

# அமைச்சரவை பொறுப்பை பெண்களால் கையாள முடியாது

## தலிபான் செய்தித் தொடர்பாளர்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் மீண்டும் ஆட்சியமைக்கவுள்ள நிலையில், பெண்களுக்கான பணி குழந்தை பெறுவது மட்டும்தான் என்று தலிபான் செய்தித்தொடர்பாளர் கூறியுள்ளார்.

ஆரம்பத்தில், பெண்கள் மதிக்கப்படுவர், அவர்கள் வேலைக்கு அனுமதிக்கப்படுவர் என்று தலிபான் அமைப்பு கூறியது. ஆனால், தற்போது பெண்கள் விளையாடத்தடை, இசை பயிலத்தடை என பல்வேறு சட்டங்களை தலிபான்கள் கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில், தற்போது தலிபான் செய்தித் தொடர்பாளர் சையது ஜகருல்லா ஹாஷிமி, அமைச்சர் பொறுப்பை பெண்களால் வகிக்க முடியாது. அது, அவர்களால் சுமக்க முடியாத பாரத்தை அவர்களது தலையில் சுமத்துவதைப் போன்றது.

அவர்கள் பணி குழந்தை பெற்றெடுப்பது மட்டும் தான், பெண்களுக்கு அமைச்சரவையில் இடம் கேட்டு போராடுபவர்கள் அனைவரும், ஆப்கான் பெண்களின் பிரதிநிதிகள் கிடையாது என்று கூறியுள்ளார். (7-4)

# தமிழகத்தின் புதிய ஆளுநராக ஆர்.என்.ரவி நியமனம்



(சென்னை)

தமிழகத்தின் புதிய ஆளுநராக ரவீந்திர நாராயணன் ரவி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் தமிழக ஆளுநராக பதவி வகித்து வந்த பன்வாரிலால் புரோகித், தற்போது பஞ்சாப் மற்றும் சண்டிகர் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதைத் தொடர்ந்து நாகாலாந்து மாநில ஆளுநராக பணியாற்றி வந்த ஆர். என். ரவி தற்போது தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தமிழகத்தின் புதிய ஆளுநராக பொறுப்பேற்க இருக்கும் ஆர். என். ரவிக்கு முதல்வர் மு. க .ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே பழனிச்சாமி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ஆர். என். ரவி அவர்களை மத்திய அரசு பரிந்துரை மற்றும் ஆதரவுடன் குடியரசுத் தலைவர் நியமித்திருப்பதாக அரசியல் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (7-4)

# மகாகவி பாரதியாரை நினைவு கூர்ந்த பிரதமர் மோடி

(டில்லி)

மகாகவி சுப்பிரமணிய பாரதியின் நூற்றாண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

அவர் மறைந்து 100 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், இந்த ஆண்டை பாரதியார் நூற்றாண்டு என முதலமைச்சர் ஸ்டாலின் குறிப்பிட்டார். பாரதியாரின் 100 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் தமிழில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த பதிவில், "சிறப்பு வாய்ந்த சுப்பிரமணிய பாரதியாரின் 100 ஆவது நினைவு நாளில் அவருக்கு அஞ்சலி செலுத்துகிறேன். அவரது பெரும் புலமை, நாட்டுக்கு அவர் ஆற்றிய பன்முகப் பங்கு, சமூக நீதி மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் மீதான நன்னெறிகளை நாம் நினைவு கூருகிறோம்" என்று தெரிவித்துள்ளார். (7-4)

# வவுனியாவில் 50 பேருக்கு டெல்டா தொற்று உறுதி

(குருமன்காடு)

**வவுனியாவில் 50 பேருக்கு டெல்டா தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**

வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள நான்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகள் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலை கழகத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன.

அதன் முடிவுகள் வெளியாகியுள்ளதுடன் மாவட்டம் தழுவிய ரீதியில் 50 பேர் டெல்டா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் அதிகட்சமாக வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 35 பேரும், செட்டிகுளம் பிரிவில் 5 பேரும் ஏனைய பிரிவுகளில் தனா ஐவருமாக 50 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தொற்றாளர்களை கோவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை,டெல்டாவைரஸ் தொற்று பரவல் அடைவதால் மக்கள் விழிப்புணர்வுடன் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு சுகாதார பிரிவினர் கோரியுள்ளனர். (7-4-6-250-299)

# இராணுவத்தினரின் உதவியுடன் ஓய்வூதிய கொடுப்பனவு



(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் இராணுவத்தின் உதவியுடன் ஓய்வூதியம் பெறும் முதியவர்களுக்கு நேற்று முன்தினம் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப்பட்டது.

கொவிட் பரம்பல் காரணமாக நாடு முழுவதும் தனிமைப் படுத்தல் ஊரடங்கு சட்டம் நடைமுறையில் உள்ளதால் முதியவர்கள் தமது ஓய்வூதியத்தை வங்கிகளுக்கு சென்று பெற முடியாத நிலை காணப்பட்டது.

இந்நிலையில் வன்னி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தன.

பேருந்துகள் மற்றும் பிக்கப் வாகனங்களில் வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஓய்வூதியம் பெறுவர்கள் வவுனியா நகரப்பகுதியில் உள்ள அரச வங்கிகளுக்கு வருகை தந்து தமது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஓய்வூதியப் பணத்தினைப் பெற்றுச் சென்றனர். (7-4-6-250)




# சட்டவிரோதமாக மாடுகளை கடத்திச் சென்ற இருவர் கைது



(நெளுக்குளம்)

வவுனியா குடாகச்சக்கொடிய பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாடுகளை கடத்திச் சென்ற இருவர் விசேட அதிரடிபடையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.குறித்த கடத்தல் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, ஹொறவப் பொத்தானையில் இருந்து வவுனியா நோக்கி வருகைதந்த கப்ரக வாகனத்தினை குடாகச்சக்கொடிய பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் வழிமறித்து சோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது குறித்த வாகனத்தினுள் சட்டவிரோதமான முறையில் மாடுகள் கடத்திச் செல்லப்பட்டுள்ளமை தெரிய வந்தது.

குறித்தவாகனத்தில் இருந்த நபர்களை கைதுசெய்த விசேட அதிரடிப்படையினர் கடத்தலுக்கு பயன்படுத்திய கப்ரக வாகனத்தினையும் மாடுகளையும் மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (7-4-299)



நாட்டில் நிலவுகின்ற கொரோனா தொற்று காரணமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் முகமாலை பகுதியை சேர்ந்த குடும்பங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் ஒழுங்குபடுத்தலில் உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

(படம்:-கிருஷ்ணகுமார்)



ஊரடங்கு சட்டம் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் மற்றும் முன்னாள் போராளிகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. முல்லைத் தீவு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மகளிர் அமைப்பின் கோரிக்கைக்கு அமைவாக வவுனியா, உக்குளாங்குளம், 4 ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த சிவலிங்கம் ரகிஷசன் என்பவரால் குறித்த உதவித் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. (படம்:-வசந்தரூபன்)

# கிளிநொச்சியில் மின் மயானம் அமைக்க நடவடிக்கை

(தர்மபுரம்)

நாளுக்கு நாள் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் கிளிநொச்சியில் மின்தகன மயானம் அமைப்பது தொடர்பில் விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்றது

குறித்த மயானத்தை அமைக்க 25 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

மின் மயானம் அமைப்பதற்கான ஒரு குழுவும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4-316)

# பெரியமடு குளத்தில் 4 இலட்சம் இறால் குஞ்சுகள் விடப்பட்டது

(மன்னார்)

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் மற்றும் வடக்கு மாகாண சபையும் இணைந்து மன்னார் பெரியமடு குளத்தில் மீன் பிடி நடவடிக்கைகளுக்கு என 4 இலட்சம் இறால் குஞ்சுகள் விடும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றது.

கொரோனாத் தொற்று காலத்தில் கிராம மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அதேவேளை நன்னீர் மீன் பிடி தொழிலை ஊக்குவிப்பதற்காகவும் மேற்படி செயற்திட்டம் மெசிடோ நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றிற்கான இறால் குஞ்சுகளை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது.

அதே நேரம் இம்மாத இறுதி பகுதியில் கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட குளங்களிலும் இறால் குஞ்சுகள் விடுவதற்கான ஏற்பாடுகள் மெசிடோ நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4-6-285)

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 256

## நீரிழிவு உள்ளவர்கள் சுவையாக உண்ண முடியும்

நீரிழிவு நிலை உள்ளவர்கள் உண்ணக்கூடிய ஆரோக்கியமான உணவு வகைகள் உண்மையிலே அனைவருக்குமே பொருத்தமான ஒரு ஆரோக்கிய உணவு முறையாக அமைந்திருக்கிறது. இந்த உணவு வகைகள் சுவை நிறைந்ததாக,

சமையல் செய்து உண்பது மனதுக்கும் உடலுக்கும் புத்தாக்கத்தை கொடுத்து மனிதனின் ஆரோக்கியத்தை வளர்க்க உறுதுணையாக அமையும்.

சுவையாக எவற்றை உண்ண முடியும்?

முட்டை, பால், கோழி இறைச்சி, மீன், இறால், தயிர், மோர் போன்றவை அதிக புரதத்தையும், விற்றமின்கள், கனியுப்புக்களையும் கொண்டவை.

இவற்றை உங்களுக்குப் பிடித்த சுவையான வடிவத்தில் தயார் செய்து உண்ண முடியும்.

சமையலின் பொழுது வாசனைத் திரவியங்கள, போதியளவு உறைப்பு, புளி, மஞ்சள், இஞ்சி, சீரகவகைகள், வெந்தயம், மல்லி போன்றவற்றை வேண்டிய அளவில் சேர்த்துக்கொள்ள முடியும்.

இவை உடல் நலத்திற்கு நன்மை பயப்பவையாக அமைவதுடன் உணவின் சுவையையும் அதிகரிக்க உதவும்.

மரக்கறிவகைகளை தெரிவு செய்யும் பொழுது வெவ்வேறு வர்ணங்களில் காணப்படும் பலவகை மரக்கறி வகைகளை மாறிமாறி தெரிவு செய்ய வேண்டும்.

அப்பொழுது தான் எல்லா வகையான ஊட்டச்சத்துக்களும் எமக்கு கிடைக்கும்.

பூசணி, கரட், பீற்றூட், முள்ளங்கி உட்பட அனைத்து வகையான மரக்கறி வகைகளையும் பயன்படுத்த முடியும்.

நீரிழிவு நிலை உள்ளவர்கள் பழவகைகளை உண்ண முடியாது என்ற ஒரு தப்பான அபிப்பிராயம் நிலவுகிறது.


இது முற்றிலும் தவறானது. அன்னாசி, விளாம்பழம், பப்பாசிப்பழம், கொய்யாப்பழம், ஜம்புப் பழம், வாழைப்பழம், வத்தகப்பழம், தோடம்பழம், மாதுளம்பழம், நாவற்பழம் போன்ற பழவகைகள் சுவையும் ஊட்டச்சத்துக்களும் நிறைந்தவை.

இவற்றை போதிய அளவில் உண்ணமுடியும். பழங்கள் உண்ணும் பொழுது குருதிக் குளுக்கோஸின் அளவு சற்று அதிகரித்தாலும் கூட இவற்றை உண்ணுவதால் ஏற்படும் அனுகூலங்கள் பலமடங்கு அதிகமாகும்.

பழச்சாறுகளில் வெல்லத்தின் செறிவு அதிகமாகும். நார்த்தன்மை குறைவாகவும் இருப்பதுடன் பசியை கட்டுப்படுத்தும் வீதமும் குறைவாக இருக்கிறது.

எனவே பழங்களை பழச்சாறாக மாற்றி குடிப்பதிலும் பார்க்க பழங்களாக உண்பது சிறந்ததாகும்.

கொட்டை வகைகளான கச்சான், கடலை, மரமுந்திரிகை (கயூ), பொட்டுக்கடலை போன்றவை உடல் ஆரோக்கியத்தை வளர்க்க உதவும்.



எனவே இவற்றை இடை நேரத்தில் தேநீருடன் உண்ண முடியும்.

புரதச்சத்து அதிகமுள்ள பயறு, உழுந்து, சோயா, கௌப்பி, பருப்பு வகைகள் போன்றவை சுவைபட போதிய அளவில் சமைத்து உண்ண முடியும்.

உணவு முறையில் எந்த வகையான மாற்றங்கள் செய்ய முடியும்?

மாப்பொருள் செறிவு அதிகமுள்ள அரிசி, கோதுமை, ஆட்டாமா, குரக்கன் போன்றவற்றை

பயன்படுத்தி செய்யும் உணவு வகைகளை குறைத்துக் கொள்வது நல்லது. காரணம் இவை

சமிபாடு அடையும் பொழுது அதிகளவு குளுக்கோசு உண்டாகின்றது. ஒப்பீட்டளவில் தீட்டாத அரிசிமா, குறைவாக தீட்டப்பட்ட குத்தரிசி, உழுத்தம் மா, பயற்றம்மா போன்றவற்றில் செய்யப்படும் உணவு வகைகள் வெள்ளை நிற அரிசி வகைகள், வெள்ளை நிற மாவகைகளில் செய்யப்படும் உணவுகளிலும் பார்க்க சிறந்தவையாகும்.

மாப்பொருள் அதிகமுள்ள உணவு வகைகளை உண்ணும் பொழுது உணவுக் கோப்பையில் அரைப்பங்கு இலை வகைகள், மரக்கறி வகைகளால் நிறைந்திருப்பது அவசியமாகும்.

உணவிலே சீனி, சக்கரை, பனங்கட்டி, குளுக்கோசு போன்றவற்றை தவிர்த்து அவற்றிற்குப் பதிலாக தேவை ஏற்படின் இனிப்புச் சுவையுள்ள இனிப்பூட்டிகளை பயன்படுத்துவது நல்லது.

இந்த இனிப்புச் சுவையுடைய இனிப்பூட்டிகள் உடல் நிறையையோ அல்லது குருதி குளுக்கோசின் அளவையோ அதிகரிக்கமாட்டாது.

எண்ணெய், பட்டர், கொழுப்பு என்பன அதிகமுள்ள பொறித்த உணவு வகைகளுக்குப் பதிலாக "பக்" செய்யப்பட்ட உணவு வகைகளை தெரிவு செய்வது நல்லது.

உப்பை முற்றாக தவிர்த்து விட வேண்டும்என்றஅவசியம் இல்லை.

அளவான உப்பு சேர்த்து சுவையாக சமையல் செய்ய முடியும்.

உப்பு அதிகம் சேர்க்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளை தவிர்த்து விடுவது நன்மை பயக்கும் அளவுக்கு அதிகமான உப்புவகைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

உணவு முறை சம்பந்தமான சில தகவல்கள். அதிகளவு பழவகைகளையும், மரக்கறி வகைகளையும் உண்பது எம்மை மாரடைப்பு, உயர்குருதி அழுக்கம், பாரிசவாதம், நிறை அதிகரிப்பு, கொலஸ்ரோல் அதிகரிப்பு போன்ற நோய் நிலைகளிலிருந்து பாதுகாக்கும்.

வீட்டின் அன்றாட பாவனைக்கு சிறிய உணவுக் கோப்பைகளையும் சிறிய தேநீர் பேணிகளையும் பயன்படுத்துவோம்.

இது நாம் மேலதிகமாக உண்பதை தவிர்க்க உதவும்.

சோறு, பிட்டு போன்றவற்றை பரிமாறுவதற்கு சிறிய கரண்டிகளையும் மரக்கறி வகைகளை பரிமாறுவதற்கு பெரிய கரண்டிகளையும் பயன்படுத்துவோம்.

உணவை ஆறுதலாக சுவைத்து இரசித்து உண்ணும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரே வகையான உணவில் அனைத்து வகையான ஊட்டச்சத்துக்களும் அடங்கி இருக்காது.

எனவே நாம் உண்ணும் உணவின் வகைகளை மாற்றிக்கொள்வது பயன் தரும்.

உள்ளூரிலே உற்பத்தியாகும் இயற்கையான உடன் உணவு வகைகளை தெரிவு செய்வது பல வழிகளிலும் நன்மை பயக்கும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

# எதிர்வரும் காலங்களில் நெல்லின் விலை அதிகரிக்கும்

(கொழும்பு)

**நாட்டில் எதிர்வரும் காலங்களில் நெல்லின் விலையை அதிகரிக்க எதிர்பார்ப்பதாக விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**



கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், கோடிக் கணக்கில் லாபம் ஈட்டும் நெல் ஆலை உரிமையாளர்களுக்கு ஆதரவாக நிற்க வேண்டாம் என்று விவசாயிகளை வலியுறுத்தினார்.

இருப்பினும், அரிசி வியாபாரிகளிடம் இருந்து அரிசி கையிருப்புகளை கட்டுப்பாட்டு விலையில் கொள்முதல் செய்வதால், தமது விளைச்சல்களை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

நாடு நெல் கிலோவுக்கு அதிகபட்சமாக 50 ரூபா மற்றும் சம்பா நெல்லுக்கு 52 ரூபா என அரசாங்கம் அதிகபட்ச விலையை நிர்ணயித்தமையே இதற்கு காரணம் என விவசாயிகள் இதன்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# நிவாரணம் வழங்காவிடின் பேருந்துகள் சேவையில் ஈடுபடா

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

"தனியார் பேருந்து ஊழியர்களுக்கு அரசு உடனடியாக நிவாரணம் வழங்காவிட்டால், நாட்டில் தற்போது அமுலில் உள்ள ஊரடங்கு நீக்கப்பட்டாலும் பேருந்துகளை இயக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது." - இவ்வாறு இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன ஊடகங்களிடம் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் காரணமாக பேருந்துகள் இயக்கப்படாததால், சுமார் 50 ஆயிரம் பேருந்து ஊழியர்களும், 11 ஆயிரம் பேருந்து உரிமையாளர்களும் எந்த வருமானமும் இன்றி மிகவும் மோசமான நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர்.

இதன் விளைவாக, அவர்களின் குடும்பத்தினர் வாழ்க்கையின் அடிப்படைத்தேவைகளைக்கூட பூர்த்திசெய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, அரசு இது குறித்து கவனம் செலுத்தி பேருந்து ஊழியர்களுக்கு நிவாரணப் பொதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இல்லையேல் ஊரடங்கு நீங்கிய பின்னர் பேருந்துகள் இயங்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# ரஞ்சனை விடுவிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோரிக்கை



(கொழும்பு)

சிறைத்தண்டனை அனுபவித்துவரும் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குமாறு கோரி, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

கிட்டத்தட்ட 08 மாதங்களாக சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்க வேண்டும் என, நாட்டின் மூத்த பிரஜை மற்றும் முன்னாள் அரச தலைவர் என்ற ரீதியில் கேட்டுக்கொள்வதாக சந்திரிக்கா பண்டாரநாயக்க தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பாரிய குற்றங்களுக்காக சிறைத்தண்டனை வழங்கப்பட்ட பலருக்கு, தற்போதைய அரசாங்கத்தினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட காரணத்தினால் அத்தகைய பாரிய குற்றமல்லாத விடயத்திற்காக ரஞ்சன் ராமநாயக்க இவ்வாறு துன்பப்படுவது துரதிர்ஷ்டவசமான விடயம் என முன்னாள் ஜனாதிபதியின் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றத்திற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு கடந்த ஜனவரி மாதம் 12 ஆம் திகதி முதல் 4 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இரு மருத்துவர்கள்

ஒருத்தருக்கு மிகவும் கவலையாக இருந்தது.ஏன் என்றால் அவர் உடம்பிலே கொழுப்புச்சத்து அதிகமாக இருக்கின்றது என்று டாக்டர் சொல்லிவிட்டாராம். அதாவது இரத்தத்தில் கொழுப்பு அதிகமாக இருக்குதாம். டாக்டர் ஆலோசனைப்படி உணவுக் கட்டுப்பாடு-தேகப் பயிற்சி எல்லாம் செய்துவந்தார்.

அதனால் குணமும் தெரிந்து கொண்டு வந்தது.. அந்தச் சமயத்திலே ஊரிலே இருந்து ஒருபாட்டியம்மா வந்தார்.இவர் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு, ஏண்டாப்பா..இப்படி கையைகாலை உதறிக் கொண்டு கிடக்கின்றாயே..என்ன விடயம்? என்று கேட்டார்.இவரும் விடயத்தை சொன்னார்.டாக்டர் சொல்கின்றபடி எல்லாவற்றையும் செய் அதோடு நான் ஒரு வைத்தியம் சொல்கின்றேன்.அதையும் செய் என்று சொன்னார். அந்த அம்மா. பாட்டி வைத்தியமா? சரி சொல் என்று அரைமனதோடு கேட்டார் இவர்.

வேறு ஒன்றுமில்லை பச்சை வெங்காயம் இருக்கின்றதல்லவா அதிலே தினம் ஒன்று சாப்பிட்டுக் கொண்டு வா என்றார்.பாட்டி சொல்லைத் தட்டக் கூடாது என்பதற்காக இவரும் தினம் ஒரு வெங்காயத்தை சாப்பிட ஆரம்பித்தார்.பாட்டி வைத்தியத்தோடு பலனை அதன்பின்பு உணர ஆரம்பித்தார். உணவுக் கட்டுப்பாடுகளாலேயும் தேகப் பயிற்சிகளாலேயும் எந்த அளவுக்கு குணம் தெரிந்ததோ..அதைப் போல் இரண்டு பங்கு குணம் இந்த வெங்காயத்திலே தெரிந்ததாம்.

சும்மா சொல்லக் கூடாது...வெங்காயமும் வெள்ளைப் பூண்டும் வீட்டிலே இருந்தால் இரண்டு டாக்டர்களே வீட்டில் இருக்கின்றது போல் நாம் நினைத்துக் கொள்ளலாம்.

இதைப் பற்றியெல்லாம் நம் வீட்டிலே இருக்கின்ற பெரியவர்கள் சொல்லும்போது அதை நம்புவதற்கு கஷ்டமாயிருந்தது.இப்பொழுது மருத்துவ நிபுணர்கள் பலபேர் ஆராய்ச்சி செய்து நிறைய விபரங்களைச் சொல்கின்றார்கள். வெங்காயமும் வெள்ளைப்பூண்டும் எந்தெந்த வியாதியைக் குணப்படுத்துகின்றது.எந்தெந்த வியாதியை தடுத்து நிறுத்த உதவுகின்றது அப்படி என்பதை கேட்டால் நீங்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு விடுவீர்கள்.

இதய நோய்கள்,புற்றுநோய், இரத்தநாளம் கடினமாக போய்விடுகின்றது. ஜலதோசம், இரத்த அழுத்தம்,இப்படி நிறைய நோய்களுக்கு இது இரண்டும் கைகண்ட மருந்தாக உபயோகப்படுகின்றது. இந்த நோய்களுக்காக நாம் பயன்படுத்திக் கொண்டு வருகின்ற ஏனைய மருந்துகளிலே உள்ள தொல்லைகளும் இதிலே சுத்தமாக கிடையாது.

அது சரி... வெங்காயத்திற்கும் வெள்ளைப் பூண்டுக்கும் நோயை தடுக்கின்ற அல்லது குணப்படுத்துகின்ற சக்தி எங்கேயிருந்து கிடைக்கின்றது?

அதிலேயெல்லாம் அலிஸின் என்கின்ற எண்ணெய்ச்சத்து இருக்கின்றது. ஒரு மாதிரியாக எரிச்சலூட்டுகின்ற நெடியை கொடுக்கின்றது இது தான். இந்த எண்ணெய் சத்திலே தான் ஏகப்பட்ட மருத்துவ சக்தி இருக்கு. ஹாம்பர்கைச் சேர்ந்த டாக்டர் வால்டர் ஹான் என்கின்ற ஆராய்ச்சியாளர் இதைச் சொல்கின்றார்.

லூயிபாஸ்டர் என்று ஒருவிஞ்ஞானி இருந்தாரல்லவா பல வியாதிகளுக்கு தடுப்பூசி மருந்து கண்டுபிடித்தவர் அவர் தானே.

அவர் 1885 இலேயே வெள்ளைப் பூண்டுக்கு நோய் எதிர்ப்பு சக்தி இருக்கின்றது என்பதைக் கண்டுபிடித்திருக்கின்றார்.

அமெரிக்காவிலே ஒரு மருத்துவ நிபுணர். டாக்டர் ருத்லாங் என்று பெயர். அவர் நிறைய ஆராய்ச்சி-சோதனை எல்லாம் செய்து பார்த்துவிட்டு-இரத்த அழுத்தம் அதிகமாக இருக்கின்றவர்கள் சாப்பாட்டிலே வழக்கமாக வெள்ளைப் பூண்டு பயன்படுத்திக் கொண்டு வந்தால் இரத்த அழுத்தம் குறையும் என்று சொன்னார்.சாதாரணமாக தலைவலிக்கு நாம்சாப்பிடுகின்ற அஸ்பிரின் மாத்திரைக்கு மாரடைப்பு, பக்கவாதம் இது மாதிரியான அபாயகரமான நோய்களை தடுத்து நிறுத்துகின்ற சக்தி இருக்கிறதாக சொல்கிறார்கள் இல்லையா?

இரத்தம் இறுகிப் போவதைத் தடுத்து, இரத்தத்தை நீர்க்க வைக்கின்ற சக்தி அஸ்பிரினுக்கு இருக்கிறது தான் அதற்குக் காரணம் என்றும் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.அதே மாதிரி இரத்தம் இறுகிப் போகாமல் தடுக்கின்ற சக்தி வெங்காயத்திலேயும் வெள்ளைப் பூண்டிலேயும் நிறையவே இருக்கின்றது என்று, ஜப்பானிலேயும் ஜெர்மனியிலும் நடந்திருக்கின்ற ஆராய்ச்சிகள் மூலமாக நிரூபணமாகியிருக்கின்றது.

எல்லாவற்றையும் விட முக்கியமாக புற்று நோயை தடுக்கிறதற்கும் பூண்டு உபயோகப்படும் போல் இருக்கின்றது.எங்கள் உடம்பிலே இருக்கின்ற நல்ல திசுக்களை புற்று நோய் திசுக்களாக மாற்றுவது கார்சினோஜன் என்னும் இரசாயனப் பொருள்.அது உருவாவதை இந்த வெள்ளைப் பூண்டு எப்படியோ தடுத்து நிறுத்திவிடுகின்றதாம். ஆனால் அது எப்படி என்பதை இன்னமும் கண்டு பிடிக்க முடியவில்லையாம்.

வெங்காயத்திலே செலினியம் என்னும் சத்து நிறைய இருக்கின்றது. இது இரைப்பையிலே ஏற்படும் புற்று நோயையும் ஏனைய புற்றுநோயையும் தடுத்து நிறுத்தி விடுகின்றது என்று ரஷ்ய ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கின்றார்கள்.இதைத் தவிர வெங்காயத்திலே இருக்கின்ற கந்தகச் சத்துநோய் எதிர்ப்பு சக்தியாகவும் பயன்படுகின்றது.

எங்கள் வீட்டுக்குள்ளே ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கின்ற பாட்டியுடைய வைத்தியத்தை நாம் நம்ப வேண்டும் என்றால் வெளியிலே எங்கேயோ ஒருமூலையில் இருக்கின்ற நிபுணர்கள் எல்லாம் ஆராய்ச்சி செய்து அதை நிரூபிக்க வேண்டியிருக்கின்றது. அந்தளவுக்கு எங்கள் பாட்டி மேல் நமக்கு நம்பிக்கை.



# சிறுவர் அரங்கம்

## முட்டாள் பையன்



முன்னொரு காலத்தில், ஒரு கிழவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு மூன்று புதல்வர்கள் இருந்தனர்.

அவர்களில் இரண்டு பேர் புத்திசாலிகள் மூன்றாமவன் முட்டாள். அவன் பெயர் சுந்தரம். வெதுவெதுப்பான சுணப்பு அடுப்பு மேடையில் இரவு, பகலாக அவன் படுத்து உறங்கிக் கொண்டிருப்பான்.

கிழவர் தனது வயல்களில் நெல் விதைத்திருந்தான். விரைவில் அது வளர்ந்து விட்டது. ஆனால், ஒவ்வொரு இரவும் அங்கு யாரோ வந்து நெற்பயிரை நாசம் செய்து வந்தனர்.

"குழந்தைகளே, இரவில் நீங்கள் காவல் காத்துத் திருடனை, கையும் களவுமாய்ப் பிடித்து வாருங்கள்," என்று கிழவர் கூறினார்.

இரண்டு புத்தசாலிப் புதல்வர்களும், நெற்பயிரை காவல் காப்பதற்காக முதலில் சென்றனர். ஆனால், இரவு முழுவதும் நன்றாய்த் தூங்கிவிட்டு, வீட்டுக்குத் திரும்பினர்.

"நாங்கள் இரவு முழுவதும் விழித்திருந்தோம். திருடர்கள் யாரும் வரவில்லை," என்று பொய் கூறினர்.

பிறகு முட்டாளின் முறை வந்தது. தோல் வார் கருக்குக் கண்ணி ஒன்றை எடுத்துக்கொண்டு அவன் கிளம்பினான். வயலுக்குப் பக்கத்தில் ஒரு கல் இருப்பதைப் பார்த்தான். அதன் மீது உட்கார்ந்து தூங்காமல் காவல் காக்க ஆரம்பித்தான். நள்ளிரவானதும் சாம்பல் நிறமும், பொன்னிறமும் கொண்ட ஒரு குதிரை நாலுகால் பாய்ச்சலில் ஓடி வந்தது. அதன் குளம்படியில் பூமி அதிர்ந்தது. அதன் நாசித் துவாரங்களிலிருந்து புகை வெளி வந்தது. கண்களிலிருந்து நெருப்புப் பொறிகள் பறந்தன. அந்தக் குதிரை மேய ஆரம்பித்தது.

ஆனால், அது பயிரைத் தின்றதை விட அழித்ததுதான் மிக அதிகம். (தொடரும்)

# மகாபாரதம்

181



யார் மரணத்தைக் கண்டு அஞ்சாமல் பயத்தை விலக்கி, போர்க்களத்தில் வெற்றிபெற விரும்புகிறாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார் உயிரே போனாலும் பொய் சொல்லாது உண்மையையே பேசுகின்றாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார் நிந்திக்கத்தகாத செயல்களை உடையவராக இருக்கின்றாரோ, யார் தம் பொருளைச் சாதுக்களுக்கு வழங்குகின்றாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார் இளமையில் பிரமச்சரியத்தை மேற்கொண்டு சுறுசுறுப்புடன் கல்வி கற்றுப் பல துறைகளிலும் தேர்ச்சி பெற்றவராக இருக்கின்றாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார் பிறரை அச்சுறுத்துவதில் லையோ, பிறர் அச்சுறுத்தலுக்கு பயப்படுவது இல்லையோ, யார் தம்மைப் போல பிறரையும் கருதுகின்றாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார் தான் இன்புறுவது போல் பிறரும் இன்புற வேண்டும் என எண்ணுகிறாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கிறார்.

யார் எல்லா தேவர்களையும் வழிபட்டு, எல்லாத் தருமங்களையும் கேட்டு அடக்கம் உடையவராக இருக்கின்றாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கிறார்.

யார் தற்பெருமையை விரும்பாமல் பிறரைப் பெருமைப்படுத்திப் புகழ்கின்றாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார் தம் முன்னோர்களுக்காகத் தூய மனத்துடன் ஒவ்வொரு திதியிலும் சிரார்த்தம் செய்கிறாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார் தம் கோபத்தை அடக்கி, பிறரையும் கோபம் அடையாமல் இருக்கச்செய்கின்றாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார் மது, மாமிசம் மகளிர் போகம் இவற்றை விலக்குகின்றாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார் உயிர் வாழ்வதற்காக மட்டுமே உணவு உட்கொண்டும், சந்ததிக்காகவே மனைவியுடன் கூடியும், உண்மை பேசுவதற்காக மட்டுமே பேச்சையும் கொண்டு வாழ்கின்றாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார் (தொடரும்)

உங்கள் சிந்தனையை மறைக்க வேண்டாம். நேர்மையான முறையில் வெளிப்படையாகப் பேசுங்கள்.
~ ஹோமர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உங்களை நம்பிய தமிழ் மக்களுக்கு துரோகம் செய்து விடாதீர்கள்!

ஐ.நா சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி அனுப்பிய கடிதம் தமிழ் மக்களிடம் ஏற்படுத்திய குழப்பத்தை கடவுளாலும்தீர்க்க முடியாது என்பதை அறுதியிட்டுக் கூறமுடியும். அந்தளவுக்கு நிலைமை இறுகிப் போயுள்ளது.

விடுதலைப் புலிகளின் போர்க் குற்றத்தையும் விசாரிக்க வேண்டுமென தமிழரசுக் கட்சி அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் ஒரு தரப்புக் கூறுகின்றது.

அதேநேரம் ஐ.நா சபைக்கு தமிழரசுக் கட்சி அனுப்பிய கடிதத்தில் விடுதலைப் புலிகளின் போர்க்குற்றம் தொடர்பிலும் விசாரணை நடத்த வேண்டுமென்ற கோரிக்கை எதுவும் முன்வைக்கப்படவில்லை எனப்பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார்.

ஆக, ஐ.நா சபைக்கு தமிழரசுக் கட்சி அனுப்பிய கடிதத்தில் அடங்கிய விடயம் என்ன? என்பதை ஐ.நா சபை வெளியிட்டால் அன்றி, அதனை அறிவது முடியாத காரியம்.

இந்நிலையில் மேற்படி கடிதம் தொடர்பான வாதங்களும் சர்ச்சைகளும் நீடிக்கவே செய்யும்.

தவிர, இந்த விவகாரம் தமிழரசுக் கட்சிக்குப் பாதகமாக அமையும் என்பது தெரிந்த விடயமாயினும் அதுபற்றிக் கவலை கொள்வதற்குத் தமிழரசுக் கட்சிக்குள்ளேயே ஆட்களில்லாதபோது அதுபற்றி நாம் அலட்டிக் கொள்ள வேண்டிய தேவையில்லை.

எதுவாயினும் தமிழ் மக்களுக்கு எதிராக ஒரு சில தமிழ் அரசியல் தரப்புகள் செயற்படுகின்றன என்பதில் உண்மை இருக்கவே செய்கிறது என்பதற்குப் பல உதாரணங்களைச் சான்றுப்படுத்த முடியும்.

என்ன செய்வது; சிங்களப் பேரினவாதத்தால் தமிழ் மக்கள் எவ்வளவோ கொடுமைகளை அனுபவித்திருக்கின்ற போதிலும் அவர்களுக்கு எதிராக, அவர்கள் சார்ந்த அரசியல் தரப்புகளே அநியாயம் செய்யும் போது இது ஊழ்வினைப் பயனோ என்று எண்ணுவதைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை.

எது எவ்வாறாயினும் உங்களால் எங்களுக்குத் தீர்வு கிடைக்கும் என்று நம்பி, உங்களுக்குத் தங்களின் வாக்குகளை வழங்கிய தமிழ் மக்களுக்கு நீங்கள் உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை. துரோகம் செய்யாமல் இருங்கள்.

இதற்கு மேலாக, தமிழ் மக்களின் உரிமை சார்ந்தும் தமிழ் மக்களுக்கு இலங்கை ஆட்சியாளர்கள் செய்த அட்டூழியங்களுக்கு நீதி கேட்டும் ஐ.நா சபைக்கு எழுதப்பட்ட கடிதம் விமர்சனத்துக்குரியதாக வருகிறதெனில், அதற்குக் காரணம் என்ன என்று ஆராய்வது அவசியமாகிறது.

அவ்வாறான ஆய்வு செய்யப்படுமாயின் தமிழர் தரப்புகளிடம் ஒற்றுமையும் வெளிப்படைத்தன்மையும் இல்லையென்பது அறியப்படும்.

எனவே தனிமனித அதிகாரங்களை அரசியல் கட்சிகளில் பிரயோகிப்பதை விடுத்து, தமிழினம் சார்ந்து அனைவருடனும் சேர்ந்து பயணிப்பதே தமிழினத்துக்கு விடியலைப் பெற்றுத் தருவதாக அமையும்.

## கோவிட் தொற்றை கட்டுப்படுத்த முடக்கத்தை இறுக்கமாக்குங்கள்

### சுகாதார தொழில் வல்லுனர்கள் அமைப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போதுள்ளதைப் போன்று இறுக்கமற்ற முடக்கம் தொடர்ந்தும் காணப்படுமாயின் கோவிட் கட்டுப்படுத்தலில் சிறந்த பிரதிபலனைப் பெற இன்னும் 2 மாதங்கள் காத்திருக்க வேண்டும்.

இறுக்கமான முடக்கத்தின் மூலம் 10 நாட்களில் பெற்றிருக்க வேண்டிய பிரதிபலனையே ஒரு மாதத்தின் பின்னர் தற்போது பெற்றுள்ளோம் என்று சுகாதார தொழில் வல்லுனர்கள் அமைப்பின் தலைவர் வைத்தியர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத்தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஒரேயொரு முடக்கத்தின் மூலம் கட்டுப்படுத்தியிருக்கக்கூடிய கோவிட் பரவலை ஐந்து சந்தர்ப்பங்களில் அமுல்படுத்தப்பட்ட முடக்கங்களினால் கூட கட்டுப்படுத்த முடியாமலுள்ளது.

உலகில் அதிக சந்தர்ப்பங்களில் முடக்கத்திற்கு சென்ற ஒரேயொரு நாடு இலங்கை என்றும் முடக்கத்தின் போது அதிகளவு போக்குவரத்துக்கள் இடம்பெறும் ஒரேயொரு நாடும் இலங்கை என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் டெல்டா பரவலே காணப்படுகிறது என்று நாம் கடந்த ஏப்ரல் மாத இறுதியில் கூறியதையே தற்போது ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் உறுதிப்படுத்தியுள்ளது.

எனவே இனியாவது பிறழ்வுகளை கண்டறிவதற்கான பரிசோதனைகளை சுகாதார அமைச்சு அதிகரிக்க வேண்டும். ஆனால் பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கு சுகாதார அமைச்சு அஞ்சுகிறது என்றார். (ம-3)

## பாடசாலைகளை மீண்டும் திறந்தால் மாணவ கொத்தணிகள் உருவாகும்

### பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம்

(கொழும்பு)

பாடசாலைகளை மீள ஆரம்பிக்க முன்னர் 12 வயதுக்கு மேற்பட்ட சகல மாணவர்களுக்கும் தடுப்பூசி வழங்கும் பணிகளை நிறைவு செய்ய வேண்டும். அவ்வாறில்லையெனில் மாணவர்கள் மத்தியில் கொத்தணிகள் உருவாக வாய்ப்புள்ளது.

தேவையான தடுப்பூசிகளை பகிர்ந்தளித்தால் மாணவர்களுக்கு பாதுகாப்பான முறையில் அவற்றை வழங்கத் தயார் என்று இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் தற்போது சமூகத்திலிருள்ள தொற்றாளர்கள் பாடசாலைகளுக்குள் வந்து மாணவர்கள் மத்தியில் கொத்தணிகள் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. இதன் காரணமாக மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் என சகலரும் மன உளைச்சலுக்கு உள்ளாகக் கூடும்.

இதன் காரணமாக மாணவர்கள் பாடசாலைக்கு செல்லும் வீதம் குறைவடைவதோடு, ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதிலும் சிக்கல் ஏற்படும் என்றார். (ம-3)

### மாணவிகள் 4 பேர் உட்பட

## தென்மராட்சியில் 17 பேருக்கு கொரோனா தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 17 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

82 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே 17 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில்,கைதடியில் நிறுவனம் ஒன்றில் தொழிற்பயிற்சி பெறும் விழிப்புலனற்ற மாணவிகள் நால்வர்,கைதடி முதியோர் இல்லத்தில் பணியாற்றும் ஊழியர்கள் இருவர் உட்பட 17 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர். (ம-3)

## பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை


மக்களை மையப்படுத்திய பொருளாதாரத்தையும் வளமான நாட்டையும் உருவாக்குவதே ஜனாதிபதியின் நோக்கம் என ஜனாதிபதி ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகளுக்கு மத்தியில் நெல், அரிசி, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(ம-3)

## மருத்துவக் குறிப்பு

பிரண்டையை ஒரு சட்டியில் நெய் விட்டு வறுத்து அரைத்து காலை, மாலை கோலிகுண்டளவு சாப்பிட இரத்தப்போக்கு நிற்கும்.

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று.

❖"சீசருக்கு உரியவற்றைச் சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்"

❖உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக'

❖முழு இதயத்தோடும் முழு அறிவோடும் முழு ஆற்றலோடும் அன்பு செலுத்துவதும், தன்னிடம் அன்பு கொள்வது போல் அடுத்திருப்பவரிடமும் அன்பு செலுத்துவதும் எரிபலிகளையும் வேறுபலிகளையும்விட மேலானது"

❖விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும் ஆனால், என் வார்த்தைகள் ஒழியவேமாட்டா."

❖மானிடமகன் வல்லவராம் கடவுளின் வலப்புறத்தில் வீற்றிருப்பதையும் வானமேகங்கள் சூழ வருவதையும் காண்பீர்கள்"

# மாகாண சபைத் தேர்தல்கள்

34

**கலாநிதி க.தவலிங்கம்,**
**ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்**



2008 கிழக்கு மாகாணசபைத் தேர்தலுடன் 2012 கிழக்கு மாகாணசபைத் தேர்தலை மாவட்ட அடிப்படையில் ஒப்புநோக்கின், மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் 105,341 வாக்குகளைப் பெற்று 6 ஆசனங்களை கைப்பற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, இம் முறை பாரிய வாக்குச் சரிவை சந்தித்து 64,190 வாக்குகளைப் பற்று 4 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது.

கடந்த முறைத் தேர்தலில் 58,602 வாக்குகளைப் பெற்று4 ஆசனங்களைக் கைப்பற்றிய ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை வெறும் 2,434 வாக்குகளைப் பெற்று ஆசனங்கள் எதுவும் இன்றி அக்கட்சி கிழக்கு மக்களால் புறக் கணிக்கப்பட்டுள்ளது. கடந்த முறை ஐக்கிய தேசியக் கட்சியுடன் போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரஸ் இம்முறை 23083 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் திருகோண மலை மாவட்டத்தைப் பொறுத்தவரை கடந்த முறை 70,858 வாக்குகளைப் பெற்று5 ஆசனங்களை பெற்று வெற்றி வாகை சூடிய ஐக்கிய தேசியக் கட்சி இம் முறை 24,439 வாக்குகளைப் பெற்று ஒரே ஒரு ஆசனத்தை மாத்திரம் பெற்றுக் கொண்டுள்ளது.

திருமலையில் கடந்த முறை 59,298 வாக்குகளைப் பெற்று 4 ஆசனங்களை கைப்பற்றிய ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி இம் முறை வாக்குச் சரிவை கண்டு 43,324 வாக்குகளை பெற்று 3 ஆசனங்களை மட்டும் பெற்றுக் கொண்டுள்ளது.

திருகோணமலையில் கடந்த முறை 4,266 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தை வென்ற மக்கள் விடுதலை முன்னணி இம் முறை 777 வாக்குகளைப் பெற்று ஆசனங்கள் இன்றி விரட்டியடிக்கப்பட்டுள்ளது.

கடந்தமுறை மாகாண சபைத் தேர்தலில் களம் இறங்காத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை 44,396 வாக்குகளைப் பெற்று 3 ஆசனங்களை வென்று திருமலையில் தமது பலத்தை நிரூபித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 26,176 வாக்குகளைப் பெற்று இம் முறை 2 ஆசனங்களை வென்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இட ஒதுக்கீடின்றி பஞ்சாயுத சின்னத்தில் தனித்து நின்ற தேசிய சுதந்திர முன்னணி 9522 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தை வென்று தமது தனிபலத்தை நிரூபித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை மாவட்டத்தில் கடந்த முறை 144,247 வாக்குகளைப் பெற்று 8 ஆசனங்களை தனதாக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இம் முறை பாரிய வீழ்ச்சியை கண்டு 92,530 வாக்குகளைப் பெற்று 5 ஆசனங்களை மாத்திரமே வென்றுள்ளது.

கடந்த முறை 121,272 வாக்குகளைப் பெற்று 6 ஆசனங்களை வென்ற ஐக்கிய தேசியக் கட்சி இம் முறை எதிர்பாராத சரிவை சந்தித்து 48,028 வாக்குகளைப் பெற்று3 ஆசனங்களை வென்றுள்ளது.

அம்பாறையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இம் முறை 83,658 வாக்குகளைப் பெற்று 4 ஆசனங்களை வென்ற தோடு தமிழ் தேசியக் கூட்டமைப்பு 44,749 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களை வென்றுள்ளது.

நான்கு ஆசனங்களை வென்ற ஐக்கிய தேசியக் கட்சியினுடைய ஆதரவை மட்டும் பெற்று 11 ஆசனங்களை வென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அறுதிப் பெரும்பான்மை யுடன் ஆட்சியமைக்க முடியாது போனது. பெரும்பான்மையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றுக் கொண்டுள்ள போதிலும் கூட்டு ஆட்சி அமைக்கும் முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறங்கி வெற்றிகண்டது.

### சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல் -2012

சபரகமுவா மாகாணத்தில் 13 அரசியல் கட்சிகளும் 6 சுயாதீனக் குழுக்களும் இரத்தினபுரி மா வட்டத்திலும், 13 அரசியல் கட்சிகளும் 13 சுயாதீனக் குழுக்களும் கேகாலை மாவட்டத்திலும் போட்டியிட்டன. சபரகமுவா மாகாணசபையின் மொத்த வேட்பாளர்கள் 1059. தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர் களின் எண்ணிக்கைய 44, இரண்டு Bonus உறுப்பினர்களுடன் ஆகும். 2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 08 ஆம் திகதி மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றது.

போட்டியிட்ட கட்சிகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மக்கள் விடுதலை முன்னணி, எக்ஸத் லங்கா மஹா சபா, நவசம சமாஜக் கட்சி, எக்ஸத் லங்கா பொதுஜன பக்சய, ஜாதிக சங்வர்தன பெரமுன, தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி, நவ சிஹல உறுமய, ஒக்கொம வசியோ ஒக்கொம ரஜவரு அமைப்பு, ருஹுணு ஜனதா பக்சய, ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி, ஜனசெத பெரமுன, சோசலிச சமத்துவக் கட்சி, லிபரல் கட்சி மற்றும் சுயேச்சை குழுக்கள் ஆகியனவாகும்.

இத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (A), அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (B), நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை(C), செல்லுப்படியான வாக்குகளின் எண்ணிக்கை (D) அட்டவணை 30 இல் தரப்பட்டுள்ளது.

| அட்டவணை 30 சப்ரகமுவ மாகாணசபை 2012 | |
|---|---|
| A | 1,401,795 |
| B | 878,976 |
| C | 53,126 |
| D | 825,850 |

போட்டியிட்ட கட்சிகளில்/குழுக்களில் மூன்று கட்சிகளுக்கு மட்டுமே ஆசனங்கள் கிடைத்தன. அம் மூன்று கட்சிகளும் பெற்ற வாக்குகள், ஐக்கிய மக்கள்சுதந்திரக் கூட்டணி (488,714), ஐக்கிய தேசியக் கட்சி (286,857), இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (25,985). அவை பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அட்டவணை 31ல் காட்டப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி 12,164 வாக்குகள் பெற்றும் உறுப்பினர் தெரிவாகவில்லை.

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து 22 சிங்கள உறுப்பினர்களும், ஒரு முஸ்லிம் உறுப்பினரும், ஒரு தமிழ் உறுப்பினரும், கேகாலை மாவட்டத்திலிருந்து 15 சிங்கள உறுப்பினர்களும், 2 முஸ்லிம் உறுப்பினர்களும், ஒரு தமிழ் உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

### வடமத்தியமாகாணசபைத் தேர்தல்-2012

வடமத்திய மாகாணத்தில் 9 அரசியல் கட்சிகளும் 5 சுயாதீனக் குழுக்களும அநுராதபுரம் மாவட்டத்திலும், 9 அரசியல் கட்சிகளும் 5 சுயாதீனக் குழுக்களும் பொலன்னறுவை மாவட்டத்திலும் போட்டியிட்டன. வடமத்திய மாகாண சபையின் மொத்த வேட்பாளர்கள் 544. தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 33, இரண்டு Bonus உறுப்பினர்களுடன் ஆகும். 2012ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 08 ஆம் நாள் மாகாணசபைக்கான தேர்தல்நடைபெற்றது.

போட்டியிட்ட கட்சிகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, எக்ஸத் லங்கா மஹா சபா, எக்ஸத் லங்கா பொதுஜன பக்சய, தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி, ருஹுணு ஜனதா பக்சய, ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி, ஜனசெத பெரமுன, ஐக்கிய சோசலிசக் கட்சி, மற்றும் சுயேச்சை குழுக்கள் ஆகியனவாகும்.

இத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (A), அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (B), நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை(C), செல்லுப்படியான வாக்குகளின் எண்ணிக்கை (D) அட்டவணை 32 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 31

சபரகமுவ மாகாண சபைத் தேர்தல் -2012

| மாவட்டம் | கட்சிகள் | | | |
|---|---|---|---|---|
| | ஐமசுமு | ஐதேக | இதொக | மொத்தம் |
| இரத்தினபுரி | 15 | 8 | 1 | 24 |
| கேகாலை | 11 | 6 | 1 | 18 |
| Bonus | 2 | - | - | 2 |
| மொத்தம் | 28 | 14 | 2 | 44 |

ஐமசுமு - ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டணி, ஐதேக- ஐக்கியதேசியக்கட்சி, இதொக- இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்

(தொடரும்...)

## சிவாஜிலிங்கத்...

- 19 நோய்த் தொற்றுக்குள்ளாகிய நிலையில் கோப்பாய் தேசிய கல்வியியற்கல்லூரியில் உள்ள சிகிச்சை நிலையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுகவீனம் காரணமாக வல்வெட்டித்துறை பிரதேசமருத்துவமனைக்கு நேற்று முற்பகல் 11 மணிக்குச் சென்ற அவருக்கு முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் கோவிட் - 19 தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனால் 60 வயதுக்கு மேற்பட்டவர் என்ற அடிப்படையில் எம்.கே.சிவாஜிலிங்கம் அம்புலன்ஸில் கோப்பாய் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-3,33,60)

## +2,796...

சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 483,274 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,605 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 411,233 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## 11 ஆயிரத்தை...

னால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 11 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

2020 மார்ச் தொடக்கம் நேற்று முன்தினம்வரை 11 ஆயிரத்து 152 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர். (ம-3)

## விபத்தில் மரணம்...

சைக்கிளில் சென்றபோது தவறிவீழ்ந்து காயமடைந்த வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மந்துவில் பகுதியைச் சேர்ந்த 70 வயதுடைய வயோதிபப் பெண் தன்னுடைய மகனுடன் மோட்டார் சைக்கிளில் வீட்டிற்கு அண்மையில் நடைபெற்ற உறவினருடைய திருமண வீடு ஒன்றுக்காகச் சென்றிருக்கின்றார்.

அப்போது நிலை தடுமாறி கீழே வீழ்ந்தபோது அவருடைய தலை கல் ஒன்றில் மோதியதால் தலையில் காயம் ஏற்பட்டிருக்கிறது.

அவர் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இருந்தபோதிலும் அவர் நேற்று உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (ம-3,30)

## நல்லூர்...

நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றில் ஒரு கிலோ சீனி 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது.

அதன் பிரகாரம் அவர்கள் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து வழக்கு தொடர்ந்துள்ளனர். (ம-3,33)

## விபரீத முடிவெடு...

வியாழக்கிழமை பிற்பகல் நஞ்சருந்திய நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த சிறுமிக்கு கொரோனாத் தொற்றும் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் நேற்றுச் சனிக்கிழமை காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,30)

## சிறீதரன் சொல்...

யெழுப்பியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்க் குற்றம் பற்றி சுட்டிக்காட்டும் இலங்கை தமிழரசுக் கட்சியின் ஐ.நா ஆவணம் பற்றிய உண்மைகளை அம்பலப்படுத்திய அவர், பல தடவைகளாக ஸூம் ஊடாக எம்.ஏ.சுமந்திரனுடன் தொடர்புகொண்ட போதும் இழுத்தடிக்கப்பட்டதாலேயே கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள், சி.விக்னேஸ்வரன் தரப்புடன் இணைந்து மகஜரொன்றை தயாரித்த நிலைவரத்தை விளக்கினார். (ம-3)

## 96 பேருக்கு...

மேலும் 96 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 96 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றாளர்களை கோவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-3,250,299)

## ஆபத்தான...

தற்போது நாட்டில் முடக்கல் அல்லது தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு இல்லாததுபோல் மக்கள் நடந்து கொள்வதாக சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு உத்தரவை நீடிப்பது உண்மையில் பயனற்றது. ஏனென்றால் நாட்டின் தற்போதைய முடக்கலால் எதிர்பார்க்கப்படும் சிறந்த முடிவுகளை அடைய முடியாது என்பது வெளிப்படையானது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

பொருளாதார நடவடிக்கைகள் பராமரி

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில்

# கோவிட் - 19 செயலணி கூட்டத்தில் சுகாதார பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

கோவிட் - 19 கட்டுப்பாட்டுக்கான ஜனாதிபதி செயலணியின் அடுத்த கூட்டத்தின் போது பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான சுகாதார பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது குறித்து ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர் குழு ஏற்கெனவே சுகாதாரத் துறை தலைவர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளுடன் கலந்துரையாடலை தொடங்கியுள்ளது. அடுத்த வாரம் சுகாதார அமைச்சர் இந்தக் குழுவைச் சந்திக்க உள்ளார்.

மேலும், பாடசாலைகள் திறப்பது தொடர்பாக பல முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் கூறினார்.

7ஆம் வகுப்பு முதல் 13ஆம் வகுப்பு வரை முதலில் திறக்க வேண்டும் என்பது ஒரு பரிந்துரை.

1,2,3 மற்றும் 4ஆம் வகுப்புகளை முதலில் திறக்க வேண்டும் என்ற மற்றொரு திட்டமும் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ம-3)

# உடனடியாக இராஜினாமா செய்துவிட்டு மக்கள் ஆணையைக் கோருங்கள்

## அரசிடம் சஜித் பிரேமதாஸ வேண்டுகோள்

(கொழும்பு)

உடனடியாக இராஜினாமா செய்துவிட்டு மக்கள் ஆணையை அரசு கோர வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது,

"நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசு மிகவும் நெருக்கடியான நிலையில் இருக்கின்றது.

எனவே, ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டுவதை விடுத்து, உடனடியாக அரசு பதவி விலகி தேர்தலொன்றை நடத்த வேண்டும்.

தேர்தலொன்றை நடத்தினால்தான் நாட்டை யார் ஆட்சி புரிய வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடு தற்போது மிகவும் நெருக்கடியான நிலையில் இருக்கின்றது. எவ்வாறாயினும் நாட்டை வழிநடத்த எதிர்க்கட்சியினராகிய நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

தற்போதைய அரசின் பொறுப்பற்ற, திறமையற்ற மற்றும் முறையான கொள்கை இல்லாமையே நாடு நாளுக்கு நாள் பாதாளத்தை நோக்கிச் செல்வதற்குக் காரணமாகும்.

இந்த அரசுக்கு நாட்டை மீட்டெடுப்பதற்கான திறன் இல்லை" என்றார். (ம-3)

## ஆபத்தான... (தொடர்ச்சி)

கப்பட வேண்டும் என்ற உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும், பொருளாதாரத்தை பராமரிப்பது என்ற போர்வையில் மற்ற எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன என்பது மிகவும் தந்திரமானதாகவே அமைந்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் இதில் கவனம் செலுத்தவில்லையெனில் எதிர்காலத்தில் மேலும் தொற்று மற்றும் அபாயகரமான கோவிட் வைரஸ் மாறுபாடுகளுடன் நிலைமை மிகவும் மோசமாக இருக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார். (ம-3)

## வவுனியாவில்...

வீடுகளில் இருந்தோர் என 6 பேர் கோவிட் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

தரணிக்குளம், பெரியஉலுக்குளம் பூந்தோட்டம், புளியங்குளம், பட்டானிச்சூர் (இரண்டு நபர்கள்) ஆகிய பகுதியினைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கோவிட் தொற்றால் மரணித்தவர்களாவார்கள்.

இந்நிலையில் மரணித்த 6 பேரினது உடல்களையும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்கள் 76 வயது, 80 வயதுகளை உடையவர்கள் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் உயிரிழந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை ஊடாக அனுப்பிவைக்கப்பட்ட பிசிஆர் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் ஒருவர் 99 வயதுடையவர் என்றும் மற்றையவர் 51 வயதுடையவர் என்றும் மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,33,250,299)

## மருத்துவ பீட...

பீட முதலாம் ஆண்டு மாணவி ஒருவர் விபரீத முடிவெடுத்ததில் உயிரிழந்துள்ளார்.

இதில் திருநிங்கம் சாருகா (வயது-22) என்ற மாணவியே சுன்னாகம் கந்தரோடையிலுள்ள அவரது வீட்டில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப மாணவி உடுவில் மகளிர் கல்லூரியில் முதன்மை மாணவியாகத் திகழ்ந்ததோடு குறித்த கல்லூரியில் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் மருத்துவ துறைக்குத் தெரிவாகி பாடசாலைக்கு பெருமை சேர்த்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மேலும் சில...

களைப் பெறாமல், அரசியல் ரீதியிலான முடிவுகள் அங்கு எடுக்கப்படுவதாகவும் அதனால் தொழிற்துறை என்பதை பாதுகாத்துக் கொள்வதற்காக குழுவிலிருந்து விலக சிலர் முடிவெடுத்திருப்பதாகவும் சங்கத்தின் தலைவர் டாக்டர் ருக்ஷான் பெல்லன தெரிவித்தார்.

இதேவேளை குறித்த குழுவிலிருந்து இரண்டு மருத்துவ விசேட நிபுணர்கள் இது வரை விலகியமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வேலைக்கு ஆள் தேவை

தோட்ட வேலை தெரிந்த பெண் வேலையாள் தேவை.
இடம் - நெல்லியடியை அண்மித்துள்ளவர்கள்.
நேரம் - காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை
(C-2642)

**076 714 8059**

## காணி விற்பனைக்கு

யாழ். நல்லூர் - செம்மணி பிரதான வீதியில்
நாயன்மார்கட்டில் பிரதான வீதியின் முகப்புடன்
7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
பிரித்தும் வழங்கப்படும். (7993)

தொடர்பு
**077 288 0152**
**077 623 4204**

The best opportunity for the limited students

## Diploma in English

- Fluency of Spoken Practice and Examination
- Writing experience with proper guidance
- Recognized Diploma in English within Six months
- Conducted by CALSDA

Free Seminar Via Zoom on 15.09.2021 At 7.00 p.m. to 7.30 p.m.

For
- Primary Teachers of English
- Adult learners and
- Students Expecting higher studies

Duration : Six months

Under the Colombo Academy of Language skills and Dramatic Art

**For contact : 077 788 0330**
**Zoom ID : 9975566299**
**Passcode : 1234**

Dr. Siva Muguntthan
Lecturer of English - Jaffna
(C-2648)

## பண்ணை பராமரிப்பாளர் தேவை

யாழ். புறநகர் பகுதியில் இயங்கும் பண்ணையில்
தங்கி இருந்து வேலை செய்வதற்கு
வேலையாள் தேவை.
தகுந்த சம்பளம், உணவு, தங்குமிடம் வழங்கப்படும். (7890)

**075 038 8388**

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**


இலங்கை உட்பட

# 15 நாடுகளுக்கான தடை நீக்கம்

(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட 15 நாடுகளுக்கு விதித்திருந்த சுற்றுலாத் தடையை இன்று முதல் நீக்குவதாக ஐக்கிய அரபு இராச்சியம் அறிவித்துள்ளது.

இதற்காக உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதிபெற்ற கொரோனாத் தடுப்பூசிகளை இரண்டு தடவையும் பெற்றிருத்தல் வேண்டும்.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட 15 நாடுகளுக்கு இந்த தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, முழுமையான தடுப்பூசிகளை பெற்றுக் கொண்ட சுற்றுலாப் பயணிகளை பாங்கொக்கிற்குள் அனுமதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இந்த அனுமதி வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

(ம-03)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வல்லிபுரம் குமாரசாமி**

தோற்றம் 11.04.1933
மறைவு 04.09.2019
திதி : 12.09.2021

எம் நினைவோடு நினைவாகி
எம் உணர்வோடு உணர்வாகி
எம் உயிரோடு உயிராகக் கலந்த
எம் ஆருயிர்த் தந்தையே!

என்றும் உம் நெஞ்சுருகும் நினைவோடு
திங்கள் இருபத்து நான்கில் உம்
திருப்பாதம் மலர் தூவி வணங்குகிறோம்!

விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (7851)
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் புகழ்பூத்த
பழைய மாணவர்களில் ஒருவரும்
ஓய்வுபெற்ற நில அளவை அத்தியட்சகருமான

அமரர்
**செல்லத்துரை சுப்பிரமணியம்**
( சமாதான நீதிவான் )



மலர்வு : 1937.10.07
உதிர்வு : 2021.09.10

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா
வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகரின்
பாதார விந்தங்களில் சாந்தியடைய
எல்லாம்வல்ல விநாயகப் பெருமானைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா / வைத்தீஸ்வராக் கல்லூரியின்
பழைய மாணவ நண்பர்கள்
(7889)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.